475

475

# தமிழ்ப்பணி

OFFICE OF THE REGISTRAR
25 FEB 1950
MADRAS

தமிழகம்
— திருச்சிராப்பள்ளி.

விலை ரூ. 0—12—0

0-,ம
N 50
102086

# தமிழ்ப்பணி

தமிழ்க்குருகுலம்

தமிழகத்தின்
தமிழ்ப்பணிக் குழுவினர்

தமிழகம்
உறையூர் — திருச்சிராப்பள்ளி

1950-ல் தை 1உ

பதிப்புரிமை] [விலை 0—12—0

# தமிழ்ப்பணி.

## பொருள் அடக்கம்.


1. நாட்டின் முன்னேற்றம் ... 2
2. பிறநாட்டவரின் பெருமுயற்சி ... 4
3. நாட்டுமொழியில் நற்கலைகள் ... 5
4. ஆராய்வுக்கும் தொழிலுக்கும் ஆதரவு ... 7
5. தமிழ்நாட்டின் தொன்மை ... 8
6. உலகின் முதன்மக்கள் முதன்மொழி 9
7. தமிழ்மொழியின் தன்மை ... 10
8. தமிழின் தாய்மை ... ... 13
9. பண்டைத் தமிழிலிருந்து பிறந்த மொழிகள் 13
10. இடைக்காலத் தமிழிலிருந்து பிறந்த மொழிகள் 15
11. சமஸ்கிருதம் தமிழின் வழிமொழியே 17
12. வடபால் மொழிகளின் மாறுதல்கள் 18
13. இக்காலத் தமிழிலிருந்து பிறந்த மொழிகள் 19
14. தமிழ் எழுத்தும் சொல்வளமும் பொருள்வளமும் 20
15. தமிழின் நூல்வளம் ... ... 25
16. தலைச்சங்கம்; இடைச்சங்கம்; கடைச்சங்கம். 26
17. தமிழில் இருந்து அழிந்த நூல்கள் 27
18. நாடக நாட்டிய இசை நூல்கள்; சித்தர் நூல்கள் 28
19. தமிழின் நிலையும் செய்யவேண்டிய பணியும் 29
20. மொழிபெயர்க்க வேண்டும் ... 32
21. புதுநூல்கள் இயற்ற வேண்டும் ... 34
22. பழங்கதைகளிற் பயனில்லை ... 35
23. திறமான புலமை ... ... 36
24. கலைப்பணியே கலைமகள் வழிபாடு ... 38
25. கலைவளமே பலவளமும் தரும் ... 39
26. தமிழ்ப்பணி நிலையம்—தமிழ்க் குருகுலம் 40
27. பத்துவகைப் பணிமன்றங்கள் ... 41
28. கலைஞானம் அறுபத்துநான்கு ... 44
29. அமைக்கவேண்டிய அருங்கலைகள் ... 45
30. வெளிப்பணிகளின் விவரம் ... 47
31. இதுதான் பெரிய அறப்பணி ... 49
32. தமிழ்க் குருகுலக் கொள்கையும் திட்டமும் 50
33. வேண்டுகோள் ... ... 52

# முன் அணி.

உலகில் முதலில் தோன்றிய நாடு தமிழ்நாடு; முதலில் தோன்றிய மக்கள் தமிழ்மக்கள்; முதலில் தோன்றிய மொழி தமிழ்மொழி. உலகின் பலவகையான மக்களும் தோன்றக் காரணமாயிருந்தவர்கள் தமிழர்கள்; பல மொழிகளும் தோன்றக் காரணமாயிருந்தது தமிழ்மொழி. இப்பொழுது நிலமாக உள்ள பல நாடுகள் தோன்றுவதற்கு முன்னரே உயிர் வாழ்வதற்குரிய வசதிகள் அவைகளில் அமைவதற்கு முன்னரே பண்டைத் தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் தலைசிறந்த நாகரிகம் நிறைந்த நல்வாழ்வை நடத்தி வந்தார்கள்; மொழியினை வளர்த்து விழுமிய நூல்களை அமைத்து அறிவினுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தார்கள்.

இன்னோரன்ன பண்பாடுகள் பலவும் நிறைந்த தமிழ்ப் பெருமரபின் வழிவழி வந்த தமிழ்ப்பெருமக்கள், பின்னல் தோன்றிய எந்நாட்டவரும் முன்னேற்றமடைந்து வாழும் இந்நாளில் எந்நிலையில் இருக்கின்றார்கள்? எம்முறையில் வாழ்கின்றார்கள்? பகுத்தறிவற்ற பான்மையில், தன்னுணர்வற்ற தன்மையில். எதற்கும் மற்றவரை எதிர்பார்க்கும் நிலைமையில் இருக்கின்றார்கள். வளம் குறைந்து வறுமை நிறைந்த வாழ்க்கையில் வாணளைக் கலக்கத்துடன் கழிக்கின்றார்கள். இதற்குக் காரணம் என்ன? எதுவாயினும் ஆகட்டும். இனிச் செய்யவேண்டியதைச் சிந்திக்கவேண்டும். பிறநாட்டு மக்களைப்போல நம்நாட்டவரும் வளம் நிறைந்த வாழ்வைப் பெறவேண்டுமானல் நாட்டுமக்கள் அனைவரும் நாட்டுமொழிக் கல்வியறிவையும், பல கலையறிவையும், தொழிலறிவையும் பெறவேண்டும்; உலைவின்றி உழைக்கும் பெருமுயற்சியைக்கைக் கொள்ளவேண்டும்; பெருஞ்செயல்களைபுரியவேண்டும். இவற்றிற்குரிய அரும் பணியை அறிவுடைப் பெருமக்கள் ஆற்றவேண்டும்.

பழங் கதைகளைப் பேசுவதில் பயனில்லை என்ப துண்மையாயினும், ஒரு நாட்டுமக்கள் இழந்த உணர்ச்சியைப்

-

பெற்று, எழுச்சியுற்று, முயற்சிசெய்து உயர்ச்சியடைந்து வாழ்வதற்கு அவை வழிகாட்டுமாயின் எடுத்து மொழிவதும் இழிவாகாது. பொய்க் கதைகளைப் புகன்று மக்கள் அறிவை மயக்குவதுதான் இழிவான செயலாகும். ஆதலான், தமிழின் தன்மை, தொன்மை, மேன்மைகளையும், இன்றைய நிலைமையினையும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ்க்கலை வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டு மக்களின் கல்விவளர்ச்சி கலை வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், மக்களின் ஒற்றுமை வாழ்க்கைக்கும் நாம் செய்யவேண்டிய பணிகளையும் இதில் சுருக்கி விளக்கியுள்ளோம். பிறநாட்டவரின் மொழிப்பற்றையும் மக்களிடம் கல்வியறிவும் கலையறிவும் தொழிலறிவும் பரவி நாடுமுன்னேற்றமடையஅவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகளையும் குறிப்பிட்டுள்ளோம்.

பத்தாண்டுகளில் இப்பணியை ஆற்றும் திட்டமும், பின்னர் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்தும் திட்டமும் குறிப்பிட்டுள்ளோம். தமிழ்மொழியும் தமிழ்க்கலைகளும் வளரவும், தமிழ்நாட்டு மக்கள் கல்வியறிவும் கலையறிவும் பகுத்தறிவும் ஆராய்ச்சியறிவும் பெற்று பலவகைத் தொழில் புரிந்து வளம்நிறைந்து முன்னேற்றமடையவும் இதுவே தகுந்த பணி என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். தமிழ் அன்பர்கள் கலைச்செல்வம் பொருட்செல்வம் முதலானவைகளையும் அளித்து உதவிபுரியவேண்டுமென வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இப்பணியில் ஆர்வமும் தகுந்த அறிவும் உடைய கலைப்பெரும் புலவர் ஒருவர் பதினாயிரம் உருபாய் பொருளுதவி புரியவும், தம் கல்வியறிவு, கலையறிவு, ஆராய்ச்சியறிவைக் கைம்மாறு கருதாமல் வழங்கவும், தலைமை தாங்கிப் பணியாற்றவும் இசைந்துள்ளாரென்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தமிழகம்,
உறையூர்.
1950. தை-1உ

இங்ஙனம்,
தமிழ்ப்பணிக் குழுவினர்.

வாழ்க தமிழ்!

# தமிழ்ப் பணி

---

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்.

தமிழ் மொழியைத் தாய்மொழியாக வுடைய தமிழ் மரபின் வழிவழி வந்த தமிழ்ப் பெருமக்களே! உங்கள் பெருந்துணைகொண்டு, நம் தமிழ்அன்னைக்கு இக்காலத்திற்கு இன்றியமையாத அரும் பணி புரிய ஆர்வம் கொண்டுள்ளோம். ஆதலின் தமிழின் தன்மை தொன்மை மேன்மைகளையும் இன்றைய நிலைமையில் உள்ள குறைகளையும், அவற்றை நிறைவாக்குவதற்குரிய பல துறைகளையும், அவற்றில் பணி புரிய வேண்டிய முறைகளையும், இப்பணியால் நம்மொழியும், கலையும், தொழிலும். செல்வமும், நாடும் வளம் நிறைந்து, முன்னேற்ற மடைந்து வாழ்க்கையில் பெறும் பயன்களையும், எய்தும் இன்பங்களையும் இதில் சுருக்கமாகத் தெரிவித்துள்ளோம்.

தமிழ் நாட்டிலும் பிற நாடுகளிலும் வாழும் தமிழ்ப் பெருமக்களும், தமிழ் அறிஞர்களும், இளைஞர்களும், தமிழின் முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட பிற அன்பர்களும் இதில் கூறப்பட்டுள்ளவைகளை ஊன்றிப்படித்து உணர்ந்து, இயன்றவகைகளில் ஏற்ற உதவிகள் அளித்து தமிழே உலகின் தலைசிறந்த **உயர்தனிச் செம்மொழி** என்ற உண்மையை உலகமறிய நிலைநாட்ட வேண்டும்.

உலகில் பல நாடுகள் உள்ளன. அவை பற்பல துறைகளில் முற்போக்கு அடைந்துள்ளன. இன்னும் நன்னிலையில் முன்னேற்றமடைய முயன்று கொண்டிருக்கின்றன. முயன்றால் முடியாதவையும் உண்டோ? 'முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்'' 'முயற்சியால் உயர்ச்சி பெறலாம்' 'ஊக்கம் ஆக்கம் அளிக்கும்' என்னும் முதுமொழிகள் உண்மை கண்டவர்களின் பொன்னுரைகள். எனவே, முயற்சியுள்ள நன்மக்களைப் பெற்ற நாடுகள், உணர்ச்சியும் எழுச்சியும் உற்ற இளைஞர்களை என்றெடுத்த நாடுகள், கல்வியறிவும், கலையறிவும் வளர்ந்து நிறைந்த கலைஞர்களைக் கொண்ட நாடுகள், அயர்விலா ஆராய்ச்சியுடைய அறிஞர்களை அடைந்த நாடுகள், பல்வகைத் தொழில்களிலும் வல்லவர்களைப் பயந்த நாடுகள் புதியவை கண்டு புதுப்பொருள் புனைந்து உலகைப் பொலிவாக விளங்க வைக்கும் விஞ்ஞானப்புலவர்களைப் பெற்றநாடுகள் பலவகைகளில் வளமும் நலமும் சிறந்து, வாழ்க்கையில் உயர்ந்து, முன்னேற்றம் அடைவது திண்ணமாகும்.

## நாட்டின் முன்னேற்றம்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அதன் இயற்கை வளமும் நலமும் இன்றியமையாதவை ஆயினும் அந்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியும் அசைவிலா முயற்சியுமே முதன்மையானவை ஆகும். ஒரு நாட்டு மக்கள் நல்ல கல்வியறிவும் வளர்ந்து நிறைந்த கலையறிவும் சிறந்த தொழிலறிவும், ஆழ்ந்து அகன்ற ஆராய்ச்சியறிவும் பெற்றவர்களாகவும், உலைவிலா ஊக்கமுடையவர்களாகவும் விளங்கினால் அந்நாட்டைச் சிறப்புடையதாகச் செய்துவிடலாம்.

பல நாடுகளில் நிலவளம் பலவகையாக அமைந்துள்ளன. நிலத்தின் தன்மைகளும், வெப்ப தட்ப நிலைகளும் வெவ்வேறாகவும் உள்ளன. ஆதலால், சிலவகை நிலங்களில் சிலவகைப் பொருள்கள்தாம் விளைவாகும்.

ஏனெனில், விளையும் பொருள்களுக்குரிய இன்றியமையாத சத்துக்களும், வெப்ப தட்ப நிலைகளும் நிலத்தில் இயற்கையாக அமைந்திருக்க வேண்டும். சிலவகை நிலங்களில் சிலவகைப் பயிர்களும் செடிகளும் வளர்வதற்குரிய சத்துக்களும் தட்ப வெப்ப நிலைமையும்தான் அமைந்திருக்கும். பிற பொருள்கள் விளைவதற்குரிய இயல்புகள் இயற்கையில் அமைந்திரா. எனினும், செயற்கை முறையில் சத்துக்களையும், வெப்ப தட்ப நிலைமைகளையும் நிலத்திற்கு அளித்து, விளையாத பொருள்களையும் விளைவிக்கு முறையில் இன்றைய விஞ்ஞான அறிவு வேலை செய்கின்றது. என்றும் ஒன்றும் விளையாத இயற்கையுடன் அமைந்துள்ள வறண்ட பாலை நிலத்தையும் வளம் கொழிக்கும் விளைநிலமாகச் செய்துவிடலாமென்று இன்று விஞ்ஞானிகள் விளம்புகின்றனர். இதனால், அறிவு வளமே பிறவளங்களுக்கும் முன்னேற்றத்திற்கும் முதற்காரணமாகும் என்பதை நாம் அறிய வேண்டும்.

இயற்கை வளமும் நலமும் அமைந்துள்ள நாடாயினும் அல்லது நிலமாயினும் சரி அங்கு வாழும் மக்கள் அதன் பண்பை, அறிந்து, பயன்பெறுமுறைகளைத் தெரிந்து பயன்படுத்திக்கொள்ளாவிடில் அவர்களுக்கு என்ன நன்மைகள் ஏற்படும். இங்ஙனம் இயற்கை வளத்தினையும் நலத்தினையும் பயன்படுத்திக்கொள்ளுதற்குரிய கல்வியறிவும், கலையறிவும் தொழிலறிவும், ஆராய்ச்சியறிவும் அற்ற மக்களையுடைய நாடுகள் எக்காலத்தும் எவ்விதத்தும் முன்னேற்றமடையா. எனவே, ஒரு நாட்டின் முன்னேற்றமும் இழிநிலையும் அந்நாட்டு மக்களின் அறிவைப் பொறுத்தே அமையும். இயற்கையில் வளமும் நலமும் அமையப் பெறாத நாடுகள் பல மக்களின் அறிவாலும் பேருழைப்பாலும் முன்னேற்றமடைந்துள்ளன. இதற்குப் பல மேனாடுகளும் ஜப்பான் போன்ற கீழ் நாடுகளும் எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. இயற்கை வளநலங்கள் அமைந்ததுள்ள நாடுக

ளும் மக்கள் முயர்ச்சியின்மையால் முன்னேற்றமடையாமல் உள்ளன. அதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது தமிழ்நாடு என்று சொல்வது தவருகாது.

## பிறநாட்டவரின் பெருமுயற்சி,

ஒரு நாடு முன்னேற்றத்திற்கு அந்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியே அடிப்படை என அறிந்தோம். இதைப் பிறநாட்டு அரசாங்கத்தார்களும் அறிஞர்களும் நன்கு உணர்ந்துள்ளார்கள். தம் நாட்டுமக்கள் (ஆண் பெண்) அனைவரும் தாய்மொழியில் (நாட்டு மொழியில்) கல்வி யறிவுள்ளவர்களாக இருக்கவேண்டுவது இன்றியமையாதது எனக்கருதுகின்றார்கள். மக்கள் தங்கள் தாய்மொழியில் அளவற்ற ஆர்வமுடையவர்களாகவும் விளங்குகின்றார்கள் தாய்மொழியில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாய் எவரும் இருத்தலாகாதென்பது அவர்கள் கொள்கை. அங்ஙனம் இருப்பது அந்நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் இழிவு என்பதையும் நன்கறிந்துள்ளார்கள். ஆதலால், அரசாங்கத்தார் மக்கள் யாவரும் கல்வியறிவு பெறுவதற்குரிய முறைகளைக் கையாண்டார்கள்.

## கல்வித் திட்டங்கள்.

கல்விக்கென அரசாங்கத்தார் பெருவாரியான நிதியைச் செலவழித்தார்கள். நாட்டில் உள்ள பெருஞ் செல்வர்களும் பேருதவி புரிந்தார்கள். வயதுவந்த பிள்ளைகள் அனைவரும் பள்ளியிற்சென்று படிக்கவேண்டுமென்ற கட்டாயக் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தினார்கள். கல்வி யறிவு இல்லாமல் இருக்கும் பெரியவர்களுக்கும் கல்வி புகட்ட முதியோர் கல்வித் திட்டத்தையும் ஏற்படுத்தினார்கள். பகலில் படிக்க வசதியில்லாதவர்களுக்கு இராப்பாடசாலைகள் வைத்துக் கற்பித்தார்கள். கல்வி கற்றபின் பலவகை நூல்களையும் படித்தறிவதற்குப் பல இலவச நூல் நிலையங்களையும் ஏற்

படுத்தினார்கள். சுற்றும் நூல் நிலையங்களை அமைத்து சிறு சிறு ஊர்களில் உள்ள வீடுகள் தோறும் புத்தகங்களைக் கொண்டுபோய்க் கொடுத்துப் படிக்கும்படி உதவி செய்தார்கள். இங்ஙனம் நாட்டு மக்களுக்கு நாட்டு மொழியில் கல்வி அறிவை ஊட்டும் நற்பணியை அரசாங்கத்தார் ஆற்றினார்கள்.

மேலும் சில நாடுகளில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நாட்டில் உள்ள எல்லா மக்களையும் கல்வி யறிவுள்ளவர்களாகச் செய்துவிட வேண்டுமென்ற திட்டம் வகுத்துக் கொண்டு வேலை செய்தார்கள். இதன்படி அரசாங்க அமைச்சர்களும், அரசாங்க அலுவல்களில் உள்ள மற்றவர்களும், படித்த அறிஞர்களும், ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும், மற்ற பொதுமக்களும் பெரு முயற்சியுடன் பணியாற்றினார்கள். ஓய்வு நேரங்களில் எழுத்தறிவற்றவர்களுக்குக் கல்வியறிவைப் புகட்டுவதையே கடமையெனக் கொண்டார்கள். ஒருவாறு வெற்றியும் பெற்றார்கள்.

## நாட்டுமொழியில் நற்கலைகள்.

ஒரு நாட்டு மக்கள் பொதுவாழ்வில் வழங்கும் தம் தாய் மொழியில் நல்ல கல்வியறிவைப் பெறுவதுதான் அந்நாட்டின் முன்னேற்றத்திற்கு அமைக்கும் சரியான அடிப்படையாகும். இந்த உண்மையை உணர்ந்த ஒவ்வொரு நாடும் இந்தப் பணியைச் செய்துள்ளன. நாட்டு மக்களின் பேச்சு வழக்கில் உள்ள தாய்மொழியைத் தவிர பிறமொழிகளைப் புகுத்த முயலவில்லை. ஏனெனில், உலக வாழ்விற்கும் தொழில் வளர்ச்சிக்கும் வேண்டிய பல கலை அறிவை நாட்டு மக்களுக்குத் தாய்மொழியில்தான் அறிவிக்க வேண்டும். பிற மொழிகளின் வாயிலாக அறிவிக்கவேண்டுமானால் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் பிற மொழிகளைப் பயின்றிருக்க வேண்டும். இவ்வாறே உலகில் பல மொழிகளில் வெளிவந்துள்ள பலவகைக் கலைகளையும் அவ்வம் மொழி

களில் அறிவிப்பதாயின், உலகில் உள்ள பல மொழிகளையும் மக்கள் பயின்றிருக்க வேண்டும். இங்ஙனம் உலகில் உள்ள பல நூற்றுக்கணக்கான மொழிகளையும் ஒரு நாட்டு மக்கள் பயில இயலுமா? ஒரு காலும் இயலாது. ஆதலால், பிற மொழிகளில் வல்லவர்களாக விளங்கும் சில அறிஞர்களைக் கொண்டு அவ்வம் மொழிகளில் அமைந்துள்ள பல கலைகளை யும் நாட்டுமொழியில் மொழிபெயர்த்து நாட்டுமொழி வாயி லாக எல்லாக் கலைகளையும் அறிவித்தால் எல்லா மக்களும் எளிதில் அறிந்துகொள்ள இடமுண்டாகும். இதற்காகவே நாட்டுமொழியை எல்லோரும் கற்றிருக்க வேண்டும். நாட்டு மொழியில் எல்லாக் கலைகளையும் ஆக்கி அமைத்துக் கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையை பிறநாட்டினர் பெரிதும் கொண்டுள்ளார்கள். இயற்கை வளமில்லா விடங்களைச் செயற்கையால் வளப்படுத்தி விளைவித்துப் பயன்காண்பது போன்று, தம் மொழியில் சொல்வளமும் பொருள்வளமும் இயற்கையில் அமைந்திராவிடினும், கலைவளத்திற்குரிய நூல்கள் நிறைந்திராவிடினும் அரிதின் முயன்று விரைவில் ஆக்கி அமைத்துக்கொள்ளுகின்றார்கள். இங்ஙனம் தம் மொழி இயற்கையில் குறைவுடையதாயிருந்தாலும் வேண் டிய வற்றை இயற்றிச் சேர்த்து நிறைவுடையதாக்கிக்கொள் ளும் திறமுடையவர்களாகத் திகழ்கின்றார்கள்.

உலகில் எந்த நாட்டிலாவது எந்த் மொழியிலாவது சிறந்த நூல்கள் இருந்தாலும்; புதிய புதிய ஆராய்ச்சி நூல் கள் வெளிவந்தாலும் உடனே தம் தாய்மொழியில் மரபு வழுவா நெறியில் எளிய முறையில் மொழிபெயர்த்து நூல்க ளாக்கி அமைத்துக்கொள்ளுகின்றார்கள். பொதுவாகத் தாய் மொழியைப் பயின்ற மக்கள் அனைவரும் அக்கலை நூல்களைப் படித்து அறிந்துகொள்ளலாம். இதற்கேற்றஎளிய நடையில் தெளிவான விளக்கங்களுடன் கலை நூல்களை வெளியிடு கின்றார்கள். இதனால் நாட்டுமக்கள் பல கலைகளின் அறிவை யும் எளிதாகப் பெற்றுப் பயன்பெறுகின்றார்கள்; இம்

முறைதான் ஒரு நாட்டு மக்கள் கலையறிவைப் பெறுவதற் குரிய தலைசிறந்த முறையாகும்.

## ஆராய்வுக்கும் தொழிலுக்கும் ஆதரவு.

இவ்வகையில் கலையறிவு பலர்க்கும் உண்டாவதால் நுண்ணறிவும் ஆராயும் ஆற்றலும் அமைந்த பலர் பல துறைகளில் புதிய முறைகளில் புது புது ஆராய்ச்சிகளில் சிந்தனையைச் செலுத்துகின்றார்கள். தாழா உழைப்பினால் தம் சிறந்த அறிவைக்கொண்டு ஆராய்ந்து ஒவ்வொரு துறை யிலும் புதிய முறைகளையும் புதியசெயல்களையும் கையாண்டு பயன்கண்டு களிக்கின்றார்கள். இவற்றால் புதுக் கலைகள் புதுத் தொழில்கள் புதுப் பொருள்கள் பலவற்றைக் கண்டு பிடிக்கின்றார்கள். அவற்றை முறைப்படுத்தி வகைப்படுத்தி நூல்களாக்கியும் செயல்களால் பொருள்களாக்கியும் தம் நாட்டிற்கும் உலகிற்கும் அளித்து உதவி செய்கின்றார்கள். இவற்றால் அந் நாடுகள் கலைவளம் தொழில்வளம் பொருள் வளம் செல்வவளம் நிறைந்து முன்னேற்றமடைந்து விளங்குகின்றன.

மேற்கண்டவண்ணம் ஆராய்ச்சி அறிஞர்கள் புதியவை யாகக் கண்ட கலைகளையும், முறைகளையும், தொழில்களையும் அரசாங்கத்தார் அல்லது பெருஞ் செல்வர்கள் ஆதரித்து, பொருளுதவி புரிந்து முன்னுக்குக்கொண்டுவர முழு முயற்சியும் எடுத்துக்கொள்ளுகின்றார்கள். இவ்வாறு உதவி யளித்து ஊக்காவிடில் அறிஞர்கள் அரிதின் முயன்று ஆராய்ந்து கண்டவைகள் வெளியில் வரவியலாமலும் தம் நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் பயன்படாமலும் வீணாகும் அறிஞர்களின் முயற்சியும் குறையும். ஆதலால், இதை உணர்ந்த அரசாங்கத்தார்களும் பெருஞ் செல்வர்களும் புதிய புதிய ஆராய்ச்சி முறைகளையும் தொழில்களையும் ஆதரித்து வளர்ப்பதைக் கடமையாகக் கொண்டுள்ளார்கள். மேற்கண்டவண்ணம் நாட்டு மக்களிடம் தாய்மொழியைப்

பரப்புவதிலும் தாய்மொழியை வளம்பெறச் செய்வதிலும், பிறமொழிக்கலைகளை அரிய நூல்களை மொழிபெயர்த்து மக்கள் அறியும் வண்ணம் அளிப்பதிலும், ஆராய்ச்சியாளர்கட்கும் கலைஞர்களுக்கும் தொழிலறிஞர்கட்கும் ஆதரவளிப்பதிலும் பிறநாட்டவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு பெரும்பணி புரிவதால்தான் அந்நாடுகள் கல்விவளம் கலைவளம் தொழில்வளம் பொருள்வளங்கள் நிறைந்து முன்னேற்றமடைந்து விளங்குகின்றன.

## தமிழ்நாட்டின் தொன்மை.

இந்நிலவுலகில் இன்று பற்பல நாடுகள் புதிதாய்த் தோன்றியிருக்கின்றன. முன் தோன்றி இருந்த நாடுகளில் பல இருந்தவிடம் தெரியாமல் நெடுங்கடலில் மறைந்துவிட்டன. இங்ஙனம் கடல் நிலமாவதும், நிலம் கடலாவதும் பூகோள அமைப்பில் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சிகளாகும். இவ்வுலகம் கதிரவனால் கக்கப்பட்டு வெளியில் தோன்றிப் பல கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆயின. கதிரவனிடத்தினின்று வெளிப்பட்டுத் தோன்றிய அன்று தீப்பிழம்பாக வானில் திகழ்ந்தது. பின்னர் இடைவிடாமல் பொழிந்த பெருமழை நீரை இழுத்துக்கொண்டு வெப்பந் தணிந்து, தட்ப மிகுந்து, நீர்தங்கி நிறைந்து தேங்கி கடலாடைப் போர்வையுடன் நெடுவானில் நீர்த்திரளாக நிலவியது. அந்நாளில் இந்த உலகில் எந்த நாடும் (நிலமும்) தோன்றவில்லை; நிலத்தில் வாழும் பலவகை உயிர்களும் உண்டாகவில்லை.

## உலகில் முதல் நாடு.

இழுத்துத் தள்ளி இயக்கும் கதிரவனது பேராற்றலின் கவர்ச்சிக்குட்பட்ட இவ்வுலகம் தானும் சுழன்றுகொண்டே வானவீதியில் கதிரவனைச்சுற்றி வரலாயிற்று. இவ்வாறு சுற்றுமியல்பில் அணுவணுவாகக் கதிரவனை அணுகியவண்ணம் சுற்றிக்கொண்டே வந்தது. இன்றும் இவ்வாறு

அணுகிக்கொண்டேதான் வருகிறது. இங்ஙனம் சுற்றிவரும் பூமியின் நடுக் கோட்டுப்பகுதியில் கதிரவன் கதிர்கள் நேராகப் படப்பட அங்கிருந்த நீர்ப்பெருக்கம் வற்றிக் குறைந்தன. நீரின் அடியில் நிலப்பகுதியில் நெடுகக் கிடந்த ஒரு பெரிய மலைத்தொடரின் நெடுமுடிகள் பல வெளியில் தோன்றின. பின்னும் நீர் குறையக் குறைய அம் மலைத்தொடர் முழுவதும் தோன்றியது. இதுதான் உலகில் முதலில் கல் (மலை) தோன்றி மண் தோன்றாக் கால மாகும். இது குமரி மலைத்தொடர் எனத் தமிழ்ப் பெரு மக்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின் நாளடைவில் இம்மலைத்தொடரைச் சூழ்ந்துள்ள அடி நிலப்பகுதியும் தோன்றியது. இது குமரிநாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுதான் உலகில் முதலில் தோன்றிய நாடாகும். இது பண்டைத் தமிழ்நாடு என்று வரலாறுகளில் வழங்கப்படும். இந்நாடு பரவி பெரு நிலப் பரப்பாக விளங்கிய காலத்தில் குமரிக்கண்டம் — பண்டைத் தமிழ்க்கண்டம் என்றும் பெயர் பெறலாயிற்று. இதை மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள், லெமூரியாக் கண்டம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## உலகின் முதன் மக்கள்—முதன் மொழி

உலகிலே முதலில் தோன்றிய பண்டைத் தமிழ்நாடு (குமரி நாடு) தான் முதன் முதலில் ..ய் கள் தே.. றி வளர்ச்சியடைவதற்குரி.. ..பட்டை.. ..றி..ந்து இவ்விடத்தில்தான் உயி கள் முத.. முதலி. தோன்றின அவ்வுயிர்கள் உடல் எடுக்கும் படிகளில் உ..ர்ந்து அறி மிகுந்து மனித உடலை பெற்றதும் ..ன் தன் ..தன் முத லில் தோன்றியது. இந்நாட்டிலேதான் இம் முறையி பண்டைத் தமிழ்நாடு உ..கின் முத.. நாடாக வி..ங்கியது அதில் தோன்றிய பண்டைத் தமிழ் மக்கள் உலகின் முதன் மக்களாக விளங்கினார்கள். இவர்கள் வாழ்வில் இயற்கை

புணர்வில் இயற்கையோடியைந்து எழுந்து தோன்றிய மொழிதான் உலகின் முதன் மொழியாகிய தமிழ்மொழியாகும்.

பின்னர் பன்னெடுங்காலம் சென்று மேற்கண்ட குமரிக் கண்டம் கடல்கோளுக்குட்பட்டதாலும், பக்கத்தில் புது நிலப்பகுதிகள் தோன்றியதாலும் பண்டைத் தமிழ்மக்கள் பல பக்கங்களில் பரவினர்கள். அவர்கள் மொழியும் அவர்களுடன் பரவின. அவ்வவ்விடங்களின் தட்ப வெப்ப நிலைமைக் கேற்றவாறு வாழ்க்கை முறைகளும் மாறுதலடைந்தன. மொழியும் பலவகைகளில் சிதைந்தும் திரிந்தும் மருவியும் பலவேறு மொழிகளாயின. இம் முறையில் உலக மொழிகளுக்குத் தமிழ் மொழியே தாய்மொழியாக விளங்குகின்றது.

## தமிழ் மொழியின் தன்மை.

உலக முதன் மொழியாகவும் உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும் விளங்கும் நமது தாய்மொழியாகிய தமிழ் மொழிக்குள்ள தனிச்சிறப்புகள் பலவாகும். அவற்றுள், பொதுவாகத் தமிழ்மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை மட்டும் ஈண்டு குறிப்பிடுகின்றோம்.

**1. உலக முதன் மொழி - Universal Pafent Language.**

உலகில் முதலில் உண்டானது மற்ற மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாக விளங்குவது.

**2. இயற்கை மொழி - Natural Language.**

இயற்கையில் எழுந்து இயற்கையோடியைந்து ஐம்பெரும்பூத வியல்புக்கேற்ப அமைந்து விளங்குவது.

**3. இயன் மொழி - Primitive Language.**

தன்னிடமிருந்து பல மொழிகள் பிறந்து பிரிந்து திரிந்து மருவி மாறுபாடினும் என்றும் தன்னியல்பு திரியாமல் விளங்குவது.

**4. தனி மொழி - Independent Language.**

வழிமொழி, சார்புமொழி, கலப்பு மொழிகளைப் போலன்றித் தனித்துநின்று, பிறமொழிகளின் உதவியின்றித் தனித்தியங்கும் தனிப்பெருமையுடன் விளங்குவது

**5. இலக்கிய மொழி - Classical Language.**

மக்கள் வாழ்க்கையின் இலக்கு (குறிக்கோள்) இன்னதெனக் காட்டி, அதனை நோக்கி இயக்கும் (செலுத்தும்) அறிவு நூல்களமைந்து விளங்குவது.

**6. செம்மொழி - Cultivated Language.**

இலக்கியத்திற்கேற்ற இலக்கண வரம்புகளுடன் அமைந்து திருந்திய பண்புடன் செம்மையுற்றுத் திகழ்வது.

**7. நிலை மொழி - State Language.**

பலவிடங்களில் அலைந்து திரியாது நிலைத்த நாகரிகத்துடன் வாழ்ந்த பெருமக்கள் பேசும் மொழியாக விளங்குவது.

**8. வழங்கு மொழி - Living Language.**

மக்கள் பேச்சுவழக்கில் அமையாமல் ஏட்டளவில்மட்டும் உள்ள வடமொழியைப்போல் அல்லாமல், மக்கள் வாழ்க்கையில் பேச்சு வழக்கில் வழங்கி வருவது.

**9. முதுமொழி - Ancient Language.**

புதிதாகத் தோன்றிய மொழிகளைப் போலன்றி, முதலில் தோன்றிய தமிழ்ப்பெரு மக்களிடம் முதலில் தோன்றிய அன்றுமுதல் இன்றுவரையில் வழங்கி வருவதால் பழந்தமிழ் எனப் பாராட்டப்படுவது.

**10. இளமை மொழி Youthful Language**

உலக மொழிகள் எல்லாம் தோன்றுதற்குரிய முத மொழியாக அமைந்தும் முதுமை அடையாமல் என்றும் குன்றாத இளமைத்திறனுடன் திகழ்வது

**11. மென்மொழி. Soft Language**

கனைப்பொலி கதைப்பொலி சீறல்ஒலிகளாகிய கடு ஒலிகளன்றி மென்மைத் தன்மையுடன் விளங்குவது.

12. **இன்மொழி** Sweet Language

சொற்சுவை பொருட்சுவை நிறைந்து படித்தால் வாய்க்கும், கேட்டால் செவிக்கும் நினைத்தால் சிந்தைக்கும், அறிந்தால் அறிவுக்கும் இனிமையளித்து இன்பம் விளைவிப்பது.

13. **வண்மொழி.** Fertile Language

நிறைந்த சொல்வளமும் பொருள்வளமும் அமைந்து விளங்குவது.

14. **உயிர்மொழி.** Lifegiving Language

உயிரின் இயற்கை, உயிரால் இயங்கும் உடலின் இயற்கை இவற்றிற்கேற்ப உயிர் எழுத்து மெய் எழுத்துகள் அமைந்தும் பேசும்போது உயிர்ச்சத்து அதிகமாக எழுந்து அழிந்துவிடாமல் உயிரைக்காத்து ஆயுளை வளர்க்கும் முறையில் அமைந்தும் விளங்குவது.

15. **ஆக்க மொழி (வளர்மொழி)** Growthful Language

எக்காலத்திலும் எத்துறையிலும் வேண்டிய எல்லாச் சொற்களையும் ஆக்கிக்கொள்வதற்கும் அதனல் வளர்ச்சியடைவதற்கும் உரியதாய் விளங்குவது.

16. **அறிவியல் மொழி** (Scientific Language)

விஞ்ஞான முறைகளுக்கு ஒத்தவழகையில் ஒலியியற்கையும் சேர்க்கையும் சொல்லமைப்பும் பொருள்தரு முறையும் பயனும் பொருந்தி விளங்குவது.

இம்மொழியின் தொன்மை, தன்மை, செம்மை, மேன்மை முதலான சிறந்த இயல்புகளைப்பற்றிப் பலமொழிகளில் வல்லவர்களாக விளங்கிய பிறநாட்டுப் பேரறிஞர்கள் பலரும் வியந்து பாராட்டிப் புகழ்ந்துள்ளார்கள். அவற்றையெல்லாம் இங்கு எழுதினல் இச்சிறு அறிவிப்பு நூல் பெரிதாகி விடுமெனக் கருதி விடுத்தனம் '**தமிழ்மொழி விளக்கம்**' என்ற நூலில் விரிவாக விளங்கக் காணலாம். இனி, தமிழின் தாய்மையைப்பற்றியும் சிறிது அறிந்துகொள்ள வேண்டும்.

# தமிழின் தாய்மை.

பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் குமரிக்கண்டம் கடல் கோளுக்குட்பட்ட காலத்தில் சிதைந்து புதிதாய்த் தோன்றிய பல கண்டங்களில் பரவி வாழ்ந்தார்கள் என்றும், அவர்களுக்குரிய பண்டைத் தமிழ் மொழியும் அவ்வவ்விடங்களின் தட்ப வெப்ப நிலைமைகளுக்கேற்பத் திரிந்து பல மொழிகளாயினவென்றும் முன்னர் குறிப்பிட்டுள்ளோம். அங்ஙனம் திரிந்த மொழிகள் பண்டைத் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்டு தோன்றிய வழிமொழிகளாகும். இம்முறையில் தோன்றிய வழிமொழிகள் பலவகைகளாகும். அவற்றில் பெருவாரியான வகைகளையும் அவற்றின் வழிவழி வந்த கிளைகளையும் மாத்திரம் ஈண்டு குறிப்பிடுவோம்.

## பண்டைத் தமிழிலிருந்து பிறந்த மொழிகள்.

குமரிக்கண்டம் கடல்கோளினால் பிரிந்து மேற்புறம் ஆப்பிரிக்க கண்டமும் கிழ்ப்புறம் பசிபிக் கண்டமும் தோன்றின. புதிதாக வடமேர்கில் அட்லாண்டிக் கண்டமும் தோன்றியது. குமரிக்கண்ட மக்கள் ஆப்பிரிக்கா கண்டத்திலும் அதன் வடபகுதியில் பின் தோன்றிய நிலப்பகுதிகளிலும் பரவி வாழ்ந்தார்கள். அவர்கள் மொழியும் பரவிப் பிரிந்து பல மொழிகளாயின.

ஆப்பிரிக்காவிலும் அதை அடுத்துள்ள பல நாடுகளிலும் வழங்கும் செமிதிக் இனமெனக் கருதப்படும் மொழிகளாகிய **அரபி, இஸ்யரித்யர், எதியோப்பியர், காலினியர், எபிரேயர், பொனிசியர், சமாரித்தர், கார்த்தகினியர், அசிரியர், பாபிலோனியர், அரமேயர், சீரியர், கல்தேயர், ஜானியர், பெர்சியம்** முதலன மொழிகளும இவற்றின் கிளைமொழிகள் பலவும் பண்டைத்தமிழ் மொழியினின்றும் பிரிந்து திரிந்து மேற்குப் பகுதியில் பரவிய வழிமொழிகளாகும்.

அட்லாண்டிக் கண்டத்தில் பரவிவாழ்ந்த பண்டைத் தமிழ்மக்கள் அக்கண்டம் கடலில் அழுந்திய காலத்தில் அதை

அடுத்துத் தோன்றிய பண்டைய ஐரோப்பிய நாடுகளில் குடியேறினர்கள். ஆதலால் அட்லாண்டிக் கண்டத்தில் அடைந்த மாறுதலுடன் வழங்கிய (இலாட்டியம் என்னும்) தமிழிலிருந்து தோன்றிய மொழிகள் கிரீசு முதலான பண்டைய ஐரோப்பிய நாடுகளில் பரவின.

பண்டைய ஐரோப்பாவிலும் அதைச்சார்ந்த நாடுகளிலும் இன்றைய ஐரோப்பாவிலும் வழங்கிவரும் ஐரோப்பிய இனமெனக் கருதப்படும் மொழிகளாகிய கிரேக்கம், இலத்தீன் தியுத்தனியம், கெல்தியம் இத்தாலியம், கெல்வெனியம் சிலாவனியம். பழயஜெர்மனியம், புதிய ஜெர்மனியம், காண்டிநேவியம், கோதியம், பிரசியம், டச்சு, பிலெமியம், ஆங்கிலசாக்சன், ஆங்கிலம் முதலான மொழிகளும் இவற்றின் கிளைமொழிகளும் பண்டைத் தமிழினின்றும் பிரிந்து திரிந்து வடமேற்குப்பகுதியில் பரவிய வழிமொழிகளாகும்.

கிழக்கே தோன்றிய பசிபிக் கண்டத்திலும் அதன் தொடர்பாக வடக்கே தோன்றிய ஆசியாவின் கீழ்ப்பகுதிகளிலும் அதைச்சார்ந்த நாடுகளிலும் தமிழ்மக்கள் பரவி வாழ்ந்தபோது தமிழ் மொழியும் திரிந்து பல மொழிகள் ஆயின.

ஆசியப் பகுதிகளிலும் அதைச்சார்ந்த நாடுகளிலும் கிழக்குஓரமாக வடபால் தென்பால் பகுதிகளிலும் வழங்கும் துரானிய இனமெனக் கருதப்படும் மொழிகளாகிய தைக்கம், மலாயம், கங்க்கயம், உலோகிதம், முண்டா, பர்மியம் சிங்களம் துங்குசியம், மங்கோலி, துருக்கி, சாமெடிகியம், பின்னியம், சீனம், ஜப்பானியம் முதலான மொழிகளும் இவற்றின் கிளைமொழிகளும் பண்டைத் தமிழிலிருந்து பிரிந்து கிழக்கு வடகிழக்குப் பகுதிகளில் வழங்கும் வழிமொழிகளாகும்.

மேற்கூறிய வண்ணம் இப்போது நிலமாக உள்ள ஆசியா ஆப்பிரிக்கா ஐரோப்பா கண்டங்களிலும் இவற்றி

விருந்த மக்கள் சென்று குடியேறிய பழைய அமெரிக்கா கண்டத்திலும் வழங்கிவரும் மொழிகளும், வழங்கிவந்து அழிந்த மொழிகளும் தமிழ்மொழியின் கிளைமொழிகளாகும். வடமேற்கில் தோன்றி அழுந்திய அட்லாண்டிக் கண்டத்திலும் தென்கிழக்கிலும், கிழக்கிலும் இருந்து கடலில் அழுந்திய மணிப்பல்லவத்திலும் நானூறு காவதம் நீளமிருந்து அழிந்த நாடுகளிலும் பேசப்பட்டுவந்த இலாட்டியம், நாகரம் முதலான மொழிகளும் இவற்றின் தொடர்பாக வடக்கே வழங்கிய கீழ்பாலி, கீழ்நாகரி மொழிகளும் தமிழ் மொழியின் கிளை மொழிகளாம். கிழக்கோரமாக வட துருவப் பகுதிகளில் சென்று வாழ்ந்து பூமியின் சாய்வால் உறைந்த பனியும் நிறைந்த குளிரும் தாங்காமல் நடு ஆசியாவில் இறங்கி பலவிடங்களில் பரவிய ஆரியரெனக் கூறப்படும் பண்டைத் தமிழர் வழிவழி வந்த மக்கள் வழங்கிய நாகர்மொழிச் சிதைவும் தமிழ் மொழியின் வழிமொழிகளே ஆகும்.

## இடைக்காலத் தமிழிலிருந்து பிறந்த மொழிகள்

குமரிக் கண்டத்தின் தென்பகுதி கடல்கோளுக்கிலக்கானபோது, மக்கள் மேற்கிலும் கிழக்கிலும் பிரிந்து சென்றதைப்போலவே குமரிக்கண்டத்தின் தொடர்பாக வடக்கே தோன்றிய நிலப்பகுதியிலும் பரவிக் குடியேறினார்கள். இவர்களிற் சிலர் நெடுக வடக்கே சென்றார்கள். வடக்கில் இப்போது இந்தியாவின் எல்லையாக உள்ள இமய மலை அக்காலம் நிலத்தில் தோன்றவில்லை. அவ்விடத்தில் ஆசியாப் பெருங்கடல் கிழக்கு மேற்கில் நீளமாக அமைந்திருந்தது. அதனால், அதற்கு இப்பால் இருந்த நிலப் பகுதிகளில் தங்கி நாகரிகமிகுந்த பெருவாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவ்விடம் இப்போது சிந்து வெளிமுதல் வங்க மிறுதியாக நீண்டுகிடக்கும் நிலப்பகுதியாகும்.

தெற்கே குமரிக்கண்டத் தொடர்பிலிருந்து வடக்கே மேற்கூறிய சிந்து வங்க இடைவெளிப்பகுதி வரையில் பரவியிருந்த தமிழ்மக்களின் மொழி பண்டைத் தமிழ்மொழியின் சிதைவாய்ப் பலவகைகளில் வழங்கிவந்தன. இதன்பின்னர் நேர்ந்த நிலநடுக்கத்தால் ஆசியாக் கடலின் அடியிலிருந்து இமயமலைத் தொடரும் அதை அடுத்துள்ள பீடபூமிப் பகுதியும் நிலத்தின்மேல் நிமிர்ந்து உயர்ந்தது. ஆசியாக் கடல் அமைந்திருந்தவிடம் மலையும் மேடும் ஆகிவிடவே அக்கடல் நீர் வடமேற்கில் இயற்கையில் அமைந்த இடைவெளி (வடமேற்குக் கணவாய்) வழியாகப் புரண்டு வந்தது. இதனால் நிகழ்ந்த பெருநீர்ப் புரட்சியின் காரணமாக கிழக்குமேற்கில் தமிழ்ப் பெருமக்கள் வாழ்ந்து வந்த நாகரிகத்திற் சிறந்த நகரங்கள் பல அழிந்தன. அழிந்தவை போக ஒழிந்தவை பெருநீர்க்கொணர்ந்து செருகிய மணற் குவியல்களால் மறைந்தன. பெரிய மணல்மேடுகள் பல உண்டாயின. இந்நிலையில் அங்குவாழ்ந்த மக்கள் சிதைந்து பலவாறு பிரிந்து பலவிடங்களிலும் புதிதாய்த் தோன்றிய மலையின் மேலிடங்களிலும் சென்று வாழ்ந்துவந்தார்கள். இக்காரணங்களால் அவர்கள் தமிழ் மொழியும் பலவகைகளாகப் பிரிந்தன.

இவ்வாறு இடைக்காலத் தமிழிலிருந்து பிரிந்த மொழிகள்தாம் வடநாட்டில் பலவாக வழங்குகின்றன. வங்காளி, அஸ்ஸாமிஸ், ஒரியா, சிந்தி பஞ்சாபி, பலுசியம், மராத்தி, குஜராத்தி முதலான நிலமொழிகளும் இவற்றின் கிளைமொழிகளும், மலைச்சாரல்களிலும் மலை மேலிடங்களிலும் ஒதுக்கிடங்களிலும் தனித்தனி வாழ்ந்தவர்களின் மொழிகளாகிய காஷ்மீரி, நேபாலி, (புதுபாலி) கோட்டா, கோண்டு, கூய், ஓரான், ராஜ்மஹால், பிராவி, பிராகிருதி, மால்டா, பாஸ்டு, முதலான மொழிகளும் இவற்றின் கிளைமொழிகளும் இடைக்காலத் தமிழிலிருந்து பிறந்த வழிமொழிகளாகும்.

# சமஸ்கிருதம் தமிழின் வழிமொழியே.

பசிபிக் கண்டத்தின் பழந்தமிழர் வழியில் தோன்றிப் பிரிந்து, வடதுருவம்வரை சென்று, நாடோடிகளாகத் திரிந்து, நடு ஆசியாவிற்கு வந்து வடமேற்குக் கணவாய் வழியாகப் பண்டைத் தமிழ்நாட்டில் (இந்தியாவில்) நுழைந்தவர்கள் (தம்மை ஆரியர் என்று கூறிக்கொள்ளுபவர்கள்) பேசிவந்த பண்படா மொழிக்கும் வடபால் வாழ்ந்த மக்கள் பேசிவந்த மொழிகளுக்கும் மாறுபாடுகள் நிறைந்திருந்தன. ஆகையால் அவர்கள் இம் மொழிகளில் மலையோரங்களில் பெரும்பான்மையாக வழங்கிய பாலி பிராமி (பிராவி - பிராகுவி) பிராகிருதி முதலிவைகளைக் கற்றுத் தங்கள் பண்படா மொழிச் சொற்களுடன் இச் சொற்களையும் சேர்த்து, முன்னும் பின்னும் இடையிலும் சில எழுத்துக்களையும் ஒட்டுச் சொற்களையும் இணைத்து ஒரு மொழியாக அமைத்துக் கொண்டார்கள். இங்ஙனம் பல மொழிகளைச் சேர்த்து திருத்தி அமைக்கப்பட்ட மொழிதான் இப்போது சமஸ்கிருதம் என்று கூறப்படும் மொழியாகும். பின்னர் இதையே இவர்கள் தங்களுக்குரிய இலக்கிய மொழியாகக் கொண்டார்கள்.

இதற்குமுன் வரையறை செய்யப்பட்ட மொழியும் அதை எழுதுவதற்குரிய எழுத்தும் இவர்களுக்குக் கிடையா. இவர்கள் மொழிவழக்கம் வாய்மூலமாகவே வழங்கிவந்தது பாடல்களையும் காதால் கேட்டுக் கேட்டு பாராவணமாகவே படித்துப் பழக்கம் செய்து வந்தார்கள். பின்னர் பண்டைத் தமிழ் எழுத்தின் சிதைவெழுத்துக்களாகிய பிராமி மொழியின் எழுத்துக்களையும் நாகர்மொழியின் எழுத்துக்களையும் கலந்து தங்களுக்கு ஒருவகை எழுத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். பின் நாளடைவில் ஒரு எழுத்திற்குரிய எடுத்தல்-படுத்தல் - நலிதல் முதலான பல ஒலிகளுக்கும் பல புது எழுத்துக்களை அமைத்து எழுத்துக்களைப் பெருக்கிக்கொண்டார்கள். இங்ஙனம் திருத்தி அமைத்த மொழியைத் தேவ

மொழி யென்றும் கலந்து அமைத்த எழுத்தை தேவநாகரி என்றும் கூறத் தொடங்கினார்கள்.

எனவே, பண்டைத் தமிழ்மொழி சிதைந்து பண்படாத நிலையிலிருந்த பல சொற்குழுவுடன் இடைக்காலத் தமிழின் திரிபாகிய பாலி, பிராமி, பிரகிருதியின் சொற்கள் பல சேர்ந்து முன்னும் பின்னும் இடையிலும் எழுத்துக்களையும் ஒட்டுச் சொற்களையும் ஒட்டி ஒரு வரையறை அமைத்துத் திருத்தமாக ஏற்படுத்திய மொழிதான் சமஸ்கிருதமாகும். இதனால் சமஸ்கிருதமும் தமிழின் வழிமொழி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதற்கு ஆயிரத்தின்மேற்பட்ட அகச்சான்றுகள் உள்ளன.

## வடபால் மொழிகளின் மாறுதல்கள்.

மேற்கண்டவாறு இவர்கள் அமைத்த ஒட்டுக்களுடன் கூடிய பல சொற்களை வடபால் வழங்கிய தமிழின் வழி மொழிகளோடு கலந்தமையாலும் அந்த மொழிச்சொற்களுடன் மேற்கண்ட ஒட்டுக்களைக்கூட்டித் திரித்துவிட்டமையாலும் இன்று வடநாட்டு மொழிகள் பலவும் சமஸ்கிருதச் சாயலாகக் காணப்படுகின்றன. இதனால் அவைகள் சமஸ்கிருதத்தின் வழிமொழிகள் என அவ்வம் மொழிகளுக்குரியவர்களே பிழைபட உணர்ந்தும் பிழைபடப் பேசியும் வருகின்றார்கள். இவர்கள் அறிவின் தன்மை தாயை அறியவியலாத சேயின் தன்மைபோன்றதே. இங்ஙனம் அறியாது சிலர் கூறியதை பெருவாய்ப்பாகக்கொண்டு மொழிநூலின் நுண்மையும் உண்மையும் உணரும் திறனில்லாத சிலர், சமஸ்கிருதம்தான் வடநாட்டு மொழிகளுக்கெல்லாம் - என் தமிழ் மொழிக்கும் தாய்மொழி என்று வாய்கூசாமல் வாய்மையற்ற பொய்மையைக்கூறிப் பூரித்துப் பொழுதைப் போக்கிக்கொண்டு திரிகின்றார்கள். இவர்கள் கருத்தும் கூற்றும் பொருத்தமற்றவை என்பதையும், மேற்கண்ட மொழிகள் யாவும் தமிழ் மொழியிலிருந்து எக்காலத்தில்

எவ்வாறு பிரிந்து எங்ஙனம் திரிந்து வழிமொழிகளாக வந்துள்ளன என்பதையும் 'உலக முதன்மொழி, உலகத் தாய்மொழி' என்ற நூல்களில் வானநூல் நிலநூல் உயிர்நூல் உணர்வுநூல் ஒலிநூல் மொழிநூல் வரலாற்று நூல் இவற்றைக் கொண்டும் இயற்கையமைப்பின் இயல்பைக் கொண்டும் விஞ்ஞான முறைப்படி விளக்குவோம்.

உருது, இந்தி, இந்துஸ்தானி என்னும் மொழிகள் அரபியம் பெர்சியம் இவற்றின் சிதைவாய் இந்தியாவின் இடைக்கால மரூஉ மொழிகளுடன் கலந்து உண்டான மொழிகளாம். இந்தி மொழியிலும் பலவகைப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வோரிடத்திலும் வழங்கும் இந்தியும் அவ்வம் மாகாணமொழிகள் மிகுதியும்கலந்து வெவ்வேறாய் விளங்கும். தமிழ்நாட்டில் பரப்பும் இந்தி சமஸ்கிருதச் சொல்மிகுதியும் சேர்த்து சமஸ்கிருத மயமாக்கப்பட்ட இந்தியாகும்.

## இக்காலத் தமிழிலிருந்து பிறந்த மொழிகள்.

பண்டைத் தமிழிலிருந்தும் இடைக்காலத் தமிழிலிருந்தும் பல வழிமொழிகள் தோன்றினவென்று மேலே கூறினோம். அவ்வாறே இக்காலத் தமிழிலிருந்தும் சில மொழிகள் பிரிந்துள்ளன. கன்னடம், தெலுங்கு மலையாளம், துளுவம் முதலான மொழிகளும் இவற்றின் கிளைமொழிகளாகிய குடகு, படகம், தோதகம், சவுராட்டிரம் முதலான மொழிகளும் இக்காலத் தமிழிலிருந்து தோன்றிய வழிமொழிகளாம்.

தமிழ் அறிஞராகத் திகழ்ந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் "கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும், உன் உதரத்துதித் தெழுந்து ஒன்றுபல வாயிடினும்" என்று தமிழின் தாய்மையைச் சிறப்பிக்கும் பாடலில் கூறுவதை ஆராய்ந்தால் மேற்கண்ட உண்மை புலனாகும். இம்மொழிகளின் தன்மையை நன்குணர்ந்த அவ்வம்மொழிக்குரிய புலவர்கள்

டலரும் மேற்கண்ட மொழிகள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு பிறந்த சேய்மொழிகள் (வழிமொழிகள்) என்ற உண்மையை நன்கு உணர்ந்துள்ளார்கள். ஒப்புக்கொண்டுள்ளார்கள். வெளிப்படையாக எடுத்தும் உரைத்துள்ளார்கள்

இந்த உண்மைகளை உணராமலும் மொழிநூலின் நுண்மை அறியாமலும் சிலர் வேறுவிதமாகக் கூறினார்கள். "துரானிய இனத்தில் தோன்றிய திராவிட மொழியிலிருந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு இம்மொழிகள் தோன்றின" என்பது அவர்கள் கொள்கை. இம்முறையில் தமிழ்மொழியானது தெலுங்கு கன்னடம் முதலான மொழிகளோடு உடன்பிறந்த மொழியென்றும், தமிழுக்குத் தாய்மொழி திராவிடம் என்ற ஒரு மொழி இருந்ததென்றும் கொள்ளவேண்டும். இது மொழி வரலாற்று முறைக்கே மாறானதாகும். திராவிடம் என்று பெயருடைய ஒரு மொழி உண்டா? அது எங்கு வழங்குகிறது? எந்த மக்களால் பேசப்படுகிறது? அதில் இலக்கியம் இலக்கணம் பிறநூல்கள் உண்டா? இவற்றிற்கு ஏற்ற விடை உண்டா? மொழிநூல் அறிஞர்கள் சிந்திக்க வேண்டுகின்றோம். உலக முதன்மொழியாகவும் தாய்மொழியாகவும் விளங்கும் தமிழை தமிழிலிருந்து இன்று தோன்றிய வழிமொழிகளோடு உடன்பிறப்பு மொழியாக வைத்தும், அதற்கொரு தாய்மொழியைக் கற்பித்தும் தாயைச் சேயாக்கும் தன்மை எத்தகையதென்பதை அறிவாளர் ஆராய்ச்சிக்கு விடுகின்றோம். இனி தமிழ்மொழியின் சொல்வளம் பொருள் வளம் நூல்வளம் இவைகளையும் சிறிது அறிவோம்.

## தமிழ் எழுத்தும், சொல்வளமும், பொருள்வளமும்.

### எழுத்து.

தமிழில் அமைந்துள்ள எழுத்துகள் ஐம்பூத இயற்கையுடன் பொருந்தியவை. உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய், அளபெடை, குறுக்கம் என்ற அமைப்புகள், உயிர் அறிவு

இவற்றின் இயக்க உண்மைகளையும், உணர்வு ஒலி, இவற்றின் நுண்மைகளையும் விளக்கும் வியத்தகு முறையில் அமைந்துள்ளன. இவற்றில் ஆய்தமென்னும் கருவி எழுத்தின் அரிய இயல்புகளும் பயன்களும் மிகப்பலவாகும். இதன் துணைகொண்டு உலகில் எம்மொழியில் உள்ள எவ்வொலிகளையும் தமிழ்மொழியில் ஒலித்துக்காட்டலாம், எழுதியும் படிக்கலாம். இதற்குரிய முறையும் உள்ளது. இதைப்பற்றி அறிஞர் பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்கள் விரிவுரைகளில் கூறியவற்றை நேரில் கேட்டறிந்த தமிழறிஞர்கள் உணர்வார்கள். "**தமிழின் இயற்கையுண்மை இலக்கணம்**" என்ற நூலில் 'ஆய்தவியல்' என்ற தலைப்பில் இதைப்பற்றி விளக்கமாகக் காணலாம்.

தமிழில் உள்ள உயிர் எழுத்து மெய் எழுத்துக்களில் ஒவ்வோரெழுத்திற்கும் உரு, நிறம், குணம், செயல், பயன் என ஐவகை இயல்புகளும் அமைந்துள்ளன. மேலும், ஒவ்வோரெழுத்திற்கும் ஐம்பூத இயல்பிற்கேற்றவண்ணம் பல பொருள்கள் அமைந்துள்ளன. இம்முறைப்படி எழுத்துகள் சேர்ந்து ஆன சொற்களும் பொருள்களைத் தருகின்றன. விஞ்ஞானத்தில் இன்ன இன்ன பொருள்கள் சேர்ந்தால் இன்ன இன்ன பொருள்கள் உண்டாகும் என்பதைப் போலவே இன்ன எழுத்தும் இன்ன எழுத்தும் சேர்ந்த சொல் இன்ன முறையில் இன்ன பொருளைத் தரும் என்று கூறும் முறையில் விஞ்ஞான முறைக்குப் பொருத்தமாகப் பொருள்கள் அமைந்துள்ளன. இதனால் தமிழ்மொழி ஐம்பூத இயற்கைக்கும் அறிவியலுக்கும் பொருத்தமாக அமைந்துள்ளது என யாம் கூறுகின்றோம். இவற்றின் விளக்கத்தை "தமிழ் இயற்கை அறிவியல் மொழி" Tamil Natural and Scientific Language) என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

இந்த முறையை இதுகாறும் தமிழில் எந்த நூலும் விளக்கவில்லை. எந்தப் புலவர்களும் அறிஞர்களும் எடுத்துக்

கூறவில்லை. வேறு எந்த மொழிகளில் உள்ள நூல்களும் மொழிநூல் அறிஞர்களும் இந்த முறைகளை ஆராய்ந்து கூறவுமில்லை. மொழி உலகில் இது ஒரு புதுமை என்பதி லும் ஐயமில்லை. இம்முறைப்படி எல்லாச் சொற்களும் காரணம் கொண்டே அமைந்துள்ள காரணப் பெயர்கள் என்று காணலாம். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" "மொழிப் பொருள் காரணம் விழிப் பத் தோன்று" என்று தொல்காப்பியரே சொற்கள் பொருள்தரும் காரணம் விளங்கவில்லை எனக் கூறியிருந் தாலும், இன்ன சொல் இன்னின்ன காரணங்களால் இன் னின்ன பொருள்களைத் தருகின்றன என்று காரணம்கண்டு கூறவும் இயலும். இதை "மொழிப் பொருட் காரண விளக்கம்" என்ற நூலில் விளக்கிக் கூறியுள்ளோம். இவ் வணம் தமிழ் மொழியின் எழுத்துக்களும் சொற்களும் பொருள்களும் காரண காரிய முறைப்படி அமைந்துள்ள தன்மையை அறிவுடைய உலகில் மொழிநூலறிஞர்களும் விஞ்ஞான அறிஞர்களும் அறிந்து வியந்து மகிழும் வண் ணம் பணியாற்ற வேண்டியதும் நமது நீங்காக் கடமை யாகும்.

தமிழ்மொழி தோன்றிய அன்றுமுதல் இன்றுவரை பல்லாயிரக்கணக்கான சொற்கள் அரும்பி வளர்ந்து மலர்ந்து தமிழ்ப் பூம்பொழிலை எழிலுடன் விளங்கச் செய்தன. ஒரு சொல்லினின்று பல கிளைச்சொற்கள் தோன்றலும், ஒரு சொல் பல காரணங்களால் பல பொருள்களைத் தருதலும் தமிழுக்குரிய தனிச்சிறப்பாகும். உலகில் சொற்பெருக்க மும் சொற்பொருள் வளமும் நிறைந்த மொழி தமிழே என் பது பன்மொழிப் புலவர்கள் கண்ட உண்மையாகும். சொற் கள் பல்லாயிரக் கணக்கில் தோன்றுவன போன்றே பண் டைத் தமிழ் மொழியின் சொற்கள் பல்லாயிரக்கணக்கில் மறைந்தன. அழிந்தனபோக இன்று உள்ள சங்கநூல்களில் காணப்படும் அருஞ்சொற்களில் நூற்றுக்கணக்கான சொற்

கள் இப்போது நூல்களிலும் எழுத்திலும் பேச்சிலும் எடுத்தாளப்படாமல் விடுபட்டுள்ளன. சிலகாலம் சென்ருல் அல்லது அந்நூல்கள் வழக்கத்தினின்றொழிந்தால் அச்சொற்களும் அடியோடு மறைந்துவிடும்.

இங்ஙனமே கடல்கோள்களால் அழிந்த பண்டைத் தமிழ் நூல்களில் அமைந்திருந்த பழந்தமிழ்ச் சொற்கள் பல்லாயிரக் கணக்கில் மறைந்துவிட்டன. அவைகள் யாவும் மறையாமல் இருந்தால் உலக மொழிகள் பலவும் பண்டைத் தமிழிலிருந்தே தோன்றியவை என்ற உண்மையை ஒவ்வொரு மொழிக்கு உரியவர்களும் உணர்ந்துகொள்வார்கள். இன்றைய எழுத்தாளர்கள், இலக்கியமாக்குவோர்கள், தம் எழுத்தாலும் இலக்கியங்களாலும் மொழியை வளர்ப்பதாகக் கூறிக்கொள்ளுகின்றவர்கள் பழைய சொற்களை விடுத்தும் பலவாருகச் சிதைந்து திரிந்து மாறிப்புகுந்த புதிய பிற சொற்களை எடுத்துத் தொகுத்தும் எழுதுவதே விழுமியதெனக் கருதுகின்ருர்கள். மொழிவளர்ந்து செழிப்பதற்குரிய வழி இதுதான் எனவும் மொழிகின்ருர்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினுலே" என நன்னூலார் சொன்னதை எடுத்துத் தாங்கள் செய்யும் சேட்டிற்குச் சான்ருகவும் காட்டுகின்ருர்கள். இவர்கள் செய்கையைத் தடுப்பார் எவருமில்லை. ஏன்? இவர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் அல்லவா? மறு - (குற்றம்) மலர்ச்சியாகட்டும் இதனுல் மொழியும் வளரட்டும் முன்னேறட்டும். பழையமொழிகளைத் தள்ளட்டும்; புதிய மொழிகளையே எடுத்துக்கொள்ளட்டும். ஆனுல், இவ்வாறே பிறமொழியாகத் திரிந்த புதுச் சொற்களை அப்படியே எடுத்துக் கொண்டு அவற்றிற்குரிய பழைய தமிழ்ச் சொற்களை எல்லாம் விடுத்து மறைத்து அழித்துவிட்டால் பின்னுளில் இன்னின்ன பொருள்களைக் குறிக்க உங்கள் தமிழ்மொழியில் இன்னின்ன சொற்கள் உள்ளன? நீங்கள் வழங்கும் இச்சொற்களெல்லாம் பிறமொழிச் சொற்களாயிற்றே? என்று

கடவுளார்க்கு விடை என்ன கூறுவார்கள்? விழிப்பார் களா? பிறரால் பழிக்கப்படுவார்களா? இகழப்படுவார்களா? இழிவும் பழிப்பும் இன்னதென உணரும் தன்மை இவர் களுக்கு இருந்தால் பிறமொழிகளை அப்படியே எடுக்கலாகா தென்ற பேருணர்வு இன்றே உண்டாக வேண்டுமன்றோ? இத்தகையவர்களுடன் பத்திரிகைக்காரர்கள் பலரும் ஒத்து ஊதுகின்றார்கள். தமிழில் மணிப்பிரவாளம் வந்து புகுந்து மடிந்ததைப்போலக் கலவைப்பிரளயத்தை உண்டாக்கிவிடக் கருதுகின்றார்கள். இவர்களிற் சிலர் தமிழில் உள்ள சில எழுத்துக்களை எடுத்துவிடலாம் அவை வேண்டாதவை என வும் கூறுகின்றார்கள். 'ர—ற, ல—ள—ழ, ந—ன—ண,' இந்த எழுத்துகள் ஒவ்வொன்றில் இரண்டு மூன்று வேண்டா. ஏதாவது ஒன்றை வைத்துக்கொண்டு மற்றவை களை நீக்கிவிடலாம் எனவும் உரைக்கின்றார்கள். ஏன் இவ் வாறு கூறுகின்றார்கள் என்றால்? இப்படிப் பலஎழுத்துகள் இருந்தால், இவர்கள் எழுத்துக் கலையில் இறங்கி எழுது- கோலைப் பற்றியவுடன் எந்த சொல்லுக்கு எந்த இடத்தில் எந்த எழுத்தைப் போடுவது? எந்த எழுத்தைப் போட்டால் என்ன பொருள் தரும் என்ற குழப்பம் உண்டாகிவிடுகின் றது; அகராதிகளைப் புரட்டவேண்டிய கட்டங்கள் வரு கின்றன; அகராதிகளிலோ இதைவிடப் பெருங்குழப்பந் தான். இவற்றையெல்லாம் ஒழித்துக்கட்டவே எழுத்துக் களை ஒழித்துவிட முன்வந்துள்ளார்கள். சிலர் தமிழ் எழுத்தே வேண்டியதில்லை இப்போது ஆங்கிலமொழி எழுதப்படும் உரோமன் எழுத்தில் தமிழ்மொழியையும் எழு திக் கொள்ளலாமெனவும் சொல்லுகின்றார்கள்.

நாளை மாலை வேளையில் வாழைப்பழம் கொண்டுவா.
முற்றத்தில் வற்றலை முறத்தில் பரப்பி வை.
மண்ணையாளும் மன்னன் கண்ணைப்போலக் காப்பான்
வெள்ளத்தில் வெல்லம் அழிந்தது.
பல்லில் பள்ளம் விழுந்தது.

மேத்கண்ட தொடர்களை உரோமன் எழுத்துக்களில் தனிக் குறியீடுகள் அமைக்காமல் எழுதிப் படித்துப்பார்த்து அந்த எழுத்தில் எழுதப்படும் செந்தமிழ் மொழி எந்தவகையில் இருக்குமென்பதைச் சிந்திக்க வேண்டுகின்றோம்.

## தமிழின் நூல் வளம்.

தமிழ்நாட்டில் மொழிவளர்ச்சியும் நூல்வளர்ச்சியும் சிறந்த முறையில் முன்னேற்றமடைந்திருந்ததென நூல்களின் வாயிலாக அறிகிறோம். மொழியறிவு நிறைந்த புலவர்களும் நூல்களையியற்றும் புலவர்களும் பலர் கூடியிருந்து பணியாற்றியுள்ளார்கள் என்றும் அறிகிறோம். தமிழ் அரசர்களிற் பலர் புலவர்களாகவும், தமிழ்ப்புலவர்களைச் சேர்த்துக்காத்து அவர்களால் பல நூல்களையும் காத்துத் தமிழைப் போற்றி வளர்த்த புரவலர்களாகவும் விளங்கியுள்ளார்கள். தமிழ் அரசர்களின் ஆதரவால் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் நடந்தனவென்றும் அறிகிறோம். அவற்றின் வகைகளைத் தருகின்றோம்.

**தலைச்சங்கம்:—** இது, குமரிக்கண்டத்தின் தெற்கேயிருந்த தென்மதுரையில் பாண்டியன் காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக இருந்த எண்பத்தொன்பது அரசர்களின் ஆதரவால் 4440 ஆண்டுகள் நிகழ்ந்தது. சங்கத்தை நடத்தினவர்கள் 549 புலவர்கள். கவி பாடி அரங்கேற்றியவர்கள் 4449 புலவர்கள். இவர்களுள் பாடிய அரசர்களும் எழுவர். பரிபாடல்கள் முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலன [illegible] நூல்க[illegible]யாக்கப்பட்டன. அகத்தியம் என்ற நூல் மு[illegible] தமிழ்க்கும் இலக்கணமாக அமைந்திருந்தது. இது வடக்கே இருந்து வந்ததாகக் கூறப்படும் அகஸ்தியரால் ஆக்கப்பட்டதன்

**இடைச்சங்கம்:—** இது குமரிக்கண்டத்தின் நடுப்பகுதியில் ஓடிய பஃறுளியாற்றின் கரையில் இருந்த கபாட

புரத்தில் பாண்டியன் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் ஈறுக இருந்த ஐம்பத்தொன்பது அரசர்களின் ஆதரவால் 3700 ஆண்டுகள் நிகழ்ந்தது. சங்கத்தை நடத்தினவர்கள் 59 புலவர்கள். கவிபாடி அரங்கேற்றியவர்கள் 3700 புலவர்கள். இவர்களுள் அரசர்களும் ஐவர். கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை முதலான நூல்கள் யாக்கப்பட்டன. தொல்காப்பியம் மாபுராணம் பூதபுராணம், இசைநுணுக்கம் இவைகள் இலக்கண நூல்களாக இருந்தன.

**கடைச்சங்கம்:—** இது, இப்போதுள்ள தென் மதுரையில், முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி ஈறுக இருந்த நாற்பத்தொன்பது அரசர்களின் ஆதரவால் 1850 ஆண்டுகள் நிகழ்ந்தது. சங்கத்தை நடத்தினவர்கள் 49 புலவர்கள். கவிபாடி அரங்கேற்றியவர்கள் 449 புலவர்கள். இவர்களுள் அரசர்களும் மூவர். நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, 150 கவி, 70 பரிபாடல், கூத்து வரி, பேரிசை, சிற்றிசை முதலான டல நூல்கள் யாக்கப்பட்டன. தொல்காப்பியம் முதலான நூல்களே இலக்கண நூல்களாக இருந்தன.

மேற்கண்டவண்ணம் முச்சங்கங்களைப்பற்றித் தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளன. மேற்கூறிய முச்சங்கப் புலவர்களாலும் தமிழ்நாட்டில் ஆங்காங்கிருந்த மற்றப் புலவர்களாலும் செய்யப்பட்ட நூல்களும், பாடப்பட்ட பாட்டுக்களும், தனிப்பாடல்களும் பலப்பலவாம். தனித் தனியாகப் பலரால் பாடப்பட்டபாட்டுக்களையும், பாடல்களையும் பின்வந்தவர்கள் தொகுத்து நூல்களாகவும் செய்துள்ளார்கள். பத்துப்பாட்டு, புறநானூறு, அகநானூறு போன்றவை இங்ஙனம் தொகுத்த நூல்களாம்.

தமிழ்மொழியில் முத்தமிழ்த்துறைகளிலும் வாழ்க்கைக் குரிய மற்றதுறைகளிலும் பலவகையான நூல்கள் தோன்றி

வழங்கிவந்தன வென்றும், பலதடவைகளில் நிகழ்ந்த கடல் கோள்களால் தமிழ்நாடும் தமிழ்ச் சங்கங்களும் அழிக்கப் பட்டமையாலும், பாதுகாக்கப்படாமையாலும் அவற்றில் பெரும்பாலான நூல்கள் அழிந்தனவென்றும் நூல்களால் அறிகின்றோம். அவ்வாறு அழிந்த நூல்களின் எண்ணிக்கையை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. ஆயினும் இப்போது அழியாமல் இருக்கும் பழையநூல்களிலிருந்தும் உரைகளிலிருந்தும் அழிந்துள்ள நூல்களின் பெயரை ஒருவாறு அறிய இடம் ஏற்பட்டுள்ளது. இம்முறையில் தெரிந்த அழிந்த நூல்களின் பெயர்களைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

## தமிழில் இருந்து அழிந்த நூல்கள்.

அகத்தியம், அடிநூல், அணியியல், அவிநயம், அவிநந்தமாலை, ஆசிரியமாலை, ஆசிரியமுறை. ஆசிரியமுறி, ஆனந்தவியல், ஆன்மவியல், ஆட்சிநூல், இந்திரம், இந்திரகாளியம், இளந்திரையம், எதிர்நூல், ஐந்திரம, ஒப்புநூல், ஓவியநூல், கச்சபுடம், கடகண்டு, கணக்கியல், கலியாணகாதை, கலைக்கோண்டுதண்டி, கலிப்பாடல், கவிமயக்கிறை, களரியாவிரை, களவுநூல், கனவுநூல், காலகேசி, காக்கைபாடினியம், குருகு, குண்டலகேசி, கோள்நூல், சங்கயாப்பு, சயந்தம், சாதவாகனம், சிந்தம், சிற்பநூல், சிறுகுரீஇயுரை செயன்முறை, தந்திரவுரை, தகடூர் யாத்திரை, தும்பிப்பாட்டு, தேசிகமாலை, நாககுமார காவியம், நீலகேசி, பஞ்சமரபு, பதினுறு படலம், பரிநூல், பழைய பரிபாட்டல்கள், பல்காப்பியம், பல்காயம், பன்மணிமாலை, பன்னிருபடலம், பறவைப்பாட்டு, பாட்டியன் மரபு, பாட்டுமடை, பாரதம் (பெருந்தேவன்) புணர்பாவை, புதைபல்நூல், பூதபுராணம், பெரியபம்மம், பெருவல்லம், பெருவஞ்சி, போக்கியல், மணியாரம், மந்திரநூல், மயேச்சுரயாப்பு, மாபுராணம், மார்க்கண்டகாஞ்சி, முதுநாரை, முதுகுருகு, முத்தொள்ளாயிரம், முப்பெட்டுச்செய்யுள், மூவடிமுப்பது,

யசோதரகாவியம், வஞ்சிப்பாட்டு, வளையாபதி, வாய்ப்பியம், வியாழமாலே, விசாகன்பாரதம், வீரமாலை, வீரவிளக்கம், வீரவணுக்கம், வெண்டாளி வேத்தியன்முறை வைப்பியல், வைரமலை, அரும்பைத் தொள்ளாயிரம், வஞ்சத்தொள்ளாயிரம், பாண்டியன் பாரதம். முதலானவைகள்

## நாடக நாட்டிய நூல்கள்.

கூத்து, வரி, குணநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பரதம், பரதசேனபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், முறுவல், விளக்கத்தார்கூத்து, அடிவைப்பு, அடிவரிசை, உறுப்பாட்சி, முத்திரைவிளக்கம், மெய்ப்பாட்டியல், முகக்குறி முறை, கைக்குறி முறை, கண்ணுரைக் குறி. தாளக்கட்டு, நாட்டியவிளக்கம், நிறுத்த முறை முதலானவைகள்.

## இசை நூல்கள்.

சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசைநுணுக்கம், இசைவிளக்கம். இந்திரகாளியம், பஞ்சமரபு பஞ்சமாபாரதீயம், பண்ணமைதி, பண்விரிவிளக்கம், பாட்டும்பண்ணும், ஆளத்தியமைப்பு, கருவியிலக்கணம், தாளசமுத்திரம், தாளவகையோத்து. இசைக்கூறு, பாடற்பண்பு முதலானவைகள்.

## சித்தர் நூல்கள்

அகத்தியர் பன்னிருகாண்டம், போகர் எண்ணாயிரம், கோரக்கர் மூலிகைப்பயன் ஆயிரம், கொங்கணவர் மூவாயிரத்துநூறு, கோரக்கர் வெண்பா எழாயிரம். மச்சமுனி எழுகாண்டம், சிவவாக்கியர் ஐந்துகாண்டம், கபிலர் எண்ணம், ரோமமுனிவடுகம், ராமதேவர் சந்தப்பா நந்தீசர் சந்தம். சங்குமாமுனி கவித்துறை. திருமூவர் திருமந்திரம் எண்ணாயிரம், பதஞ்சலி எழுகாண்டம், சட்டமுனிநிகண்டு, சட்டமுனி 2700, காலங்கிநாதர் நாலுகாண்டம், போகர் 700 சூத்திரம் முதலானவைகள்,

# தமிழின் நிலையும் செய்யவேண்டிய பணியும்

இதுவரையில் தமிழின் தனிப்பெருமையைப் பலவாறு கூறினோம். ஆயினும், இக்காலம் தமிழ்மொழிக்குள்ள குறைகளையும் அவற்றை நிறைவாக்கும் முறைகளையும் காண்போம். நாடு அடிமைத்தளையிலிருந்து விடுதலை அடைய வேண்டுமென்ற ஆர்வத்தை மக்களிடம் உண்டாக்கி, உரிமை வேட்கையை எழுப்பிய சுப்பிரமணிய பாரதியாரைப்பற்றித் தெரிந்துகொள்ளாதவர்கள் தமிழ்நாட்டில் இருக்கமாட்டார்கள். அவர்களின் உரிமைப்பாடல்கள் எங்கும் முழங்குகின்றன. பாரதியார், தமிழ்மொழியைப்பற்றியும் தமிழில் உள்ள குறைகளைப்பற்றியும் கூறியுள்ளார். தமிழ்மக்களின் தன்னுணர்வற்ற தன்மைகளையும் தமிழ்மக்கள் நலமாக வாழ வேண்டுமானால் என்னென்ன செய்யவேண்டும் என்பவைகளைப்பற்றியும் கூறியுள்ளார். அவற்றை முறையே கவனிப்போம்.

பாரதியார் தமிழின் தன்மையை உள்ளவாறு உணர்ந்து உள்ளபடி புகழ்கின்றார். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்றும், "தேமதுரத் தமிழோசை" என்றும் தமிழின் இனிமைப்பண்பினைப் பாராட்டுகின்றார். "வானமளந்த தனைத்து மளந்திடும் வண்மொழி" என்றும், 'வானம் அறிந்த தனைத்தும் அறிந்து வளர்மொழி" என்றும் வாழ்த்துகின்றார். வானம் மற்ற யாவும் தோன்றுதற்குக் காரணமாயுள்ளது; எல்லாவற்றையும் அளந்து அறிந்துள்ளது. அதுபோலத் தமிழும் எல்லாமொழிகளையும் தோற்றுவித்து, எல்லாவற்றையும் அளந்து அறியும் இயற்கையாற்றல் அமைந்து வளரும் இயல்புடையது என்ற கருத்தை இப்பாடலில் பொருத்திப் பாடியுள்ளார்.

இத்தகைய தமிழ் மொழிக்குரிய மக்களையும் பிறமொழிகளுக்குரிய மக்களையும் பார்க்கிறார். பிறமொழிக்குரியவர்கள்

தங்கள் தங்கள் மொழிகளிடம் கொண்டுள்ள அன்பையும் ஆர்வத்தையும் கண்ட பாரதியார், தமிழர்கள் தம்மொழியிடம் அன்பும் ஆர்வமும் இல்லாமல் மொழிப்பற்றும் இல்லாமல் இருப்பதைப் பார்த்து வருந்துகிறார். உலகில் மொழியும் மொழிப்பற்றும் இல்லாத இனங்களும் இருக்கின்றன. காட்டு மிருகங்களாகிய விலங்கினங்கட்கு மொழியுமில்லை; மொழிப்பற்றுமில்லை. காட்டுமிருகங்களைப்போலக் காட்டிலும் மலையிலும் கண்டகண்ட இடங்களிலும் அலைந்து திரிந்து வாழ்கின்ற காட்டுமிருகாண்டிகளாகிய பாமரர்களுக்கு மொழியுமில்லை. இவர்களில் சிலருக்கு மொழி இருந்தாலும் ஒலிவடிவில் பேசப்படு முறையில் இருக்கிறதேயன்றி, வரிவடிவில் எழுதப்படு முறையில் அமையவில்லை. ஆதலால் படித்துக் கற்றுக்கொள்ள வேண்டும்; வாழ்விற்குரிய பல கலைகளை ஆக்கி அமைத்து மொழியை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடத்தும் இல்லை. தமிழர்கள் இலக்கிய இலக்கியம் அமையப்பெற்று செம்மையுற்றுத் திகழும் உயர்மொழிக்குரியவர்களாயிருந்தும் மேலே கூறப்பட்ட பாமரர்களைப் போலவும் விலங்குகளைப் போலவும் வாழ்கின்றார்கள். மொழிப்பற்றுடன் வாழும் பிறமொழிக்குரியவர்கள், மொழிப் பற்றற்ற தமிழர்களைப் பார்த்து இழிவாகக் கருதுகின்றார்கள் இகழ்ச்சியாகப் பேசுகின்றார்கள். தாய்மொழியைப் போற்றாமல் புறக்கணித்த காரணத்தால் மற்றவர்களால் இகழப்பட்டு தமிழ்மரபிற்குரிய பான்மைகெட்டு வாழ்கின்றார்கள். ஆனால் தமிழர் என்ற பெயரைமட்டும் விட்டுவிடாமல் வழங்கிக்கொண்டு வருகின்றார்கள். இதை உணர்ந்த பாரதியார் மனம் புழுங்கி வயிறு எரிந்து பாடுகின்றார்; சரியாகச் சாடுகின்றார்; தகுந்த விடை கொடுக்குமாறு கடாவுகின்றார். "பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!" என்கிறார். பாடலில் அமைந்துள்ள

சொற்களையும் பொதிந்துள்ள பொருள்களையும் பாருங்கள்.

மேலும் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழில் பேசத் தெரியாமல் ஊமையர்களைப் போலவும் இருக்கின்றோம். தமிழில் அறிஞர்கள் பேசினால் கேட்டுப் புரிந்துகொள்ள வியலாமல் செவிடர்களைப்போலவும் இருக்கின்றோம். தமிழ் நூல்களைப்படித்துப் பொருள் அறிந்துகொள்ள வியலாமல் குருடர்களைப் போலவும் இருக்கின்றோம். இதைத், "ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்" என்றும் கூறுகின்றார். தமிழ்ப்பற்றின்றி தமிழரெனப் பெயர்கொண்டு வாழ்வதைவிடச் சாவது நல்லதென்றுதான் சுட்டிக்காட்டுகின்றார்.

தமிழில் பற்றுள்ளவர்கள் என்ன செய்யவேண்டும் உள்ள குறையை உணரவேண்டும். இக்காலத்திற்கு இன்றியமையாத விஞ்ஞானக்கலைகளும் தொழில்வளர்ச்சிக்கேற்ற முறைகள் அமைந்த நூல்களும் தமிழில் இல்லையென்பது உண்மை. இது பெருங்குறைதான். இக்குறை மொழியின் குறையாகாது. மொழிக்குரிய மக்களின் முயற்சிக் குறைவேயாகும். இதை நன்குணர்ந்த பாரதியார், தமிழன்னை தன் மக்களைப்பார்த்து முறையிடுவதுபோலக் கூறுகின்றார்:—

புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை — அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்.

"மேனாடுகளில் ஐவகை பூதங்களை நுட்பங்களை ஆராய்ந்து எழுதப்பட்ட புதிய புதிய விஞ்ஞானக் கலைகள் வளர்ந்து மிளிர்கின்றன. அந்தக் கலைகள் தமிழில் இல்லை. அக் கலைச்சொற்களைத் தமிழில் சொல்லவும் முடியவில்லை;

சொற்களை ஆக்கிக்கொள்ளும் திறமையும் தமிழ்மொழிக்கு இல்லை. ஆதலால், தமிழ் இனி இறந்துபடும்; மேனாட்டு மொழியே வழங்கும்'' என்று ஒருவன் சொல்லக்கேட்டேன்.

"என் அருமை மக்களே! உலகில் நிகரிலா நிலையில் வாழ்ந்தேன். இன்று உங்களை மக்களாகப் பெற்ற எனக்கு இந்தப் பழிவந்து பொருந்தலாமா? நான் அழிந்தபின் நீங்கள் தமிழ்மக்கள் எனத் தரையில் வாழத் தகுதியுண்டா? வாழ வழிதான் உண்டா? கருதிப்பாருங்கள். நீங்களும் மற்றவர்களைப்போல் வளமுடன் வாழவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''

எட்டுத்திசைகளில் உள்ள பிறநாடுகளுக்குச் சென்று அவ்வந் நாட்டு மொழிகளில் உள்ள அருங்கலைகள் அனைத்தையும் திரட்டிக்கொண்டு வந்து தமிழில் நூல்களாக்கிக் கலைவளம் நிலவும் பணியை ஆற்றுங்கள்'' என்று தமிழன்னை சாற்றுவதாகப் பாரதியார் கூறுகிறார்.

இங்ஙனம், தமிழன்னையின் கூற்றில் அமைத்துக் கூறியதோடமையாமல் தமிழ்மக்களை நோக்கி அவர் கூறுவதையும் ஆராய்வோம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதி லோர் மகிமை யில்லை
திறமான புலமை எனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

**மொழிபெயர்க்க வேண்டும்.**

தமிழில் இருந்து அழிந்த நூல்களை முன்னர் குறிப்

பிட்டுள்ளோம். அவற்றில் பல அருங் கலைநூல்களாக இருக்கவேண்டும். ஆயினும், அவை அழிந்தபின் பிற்காலத் தமிழ்மக்களுக்கு அத்தகைய நூல்களை ஆக்கும் அறிவும் திறனும் மறைந்துவிட்டனவா? மங்கிவிட்டனவா? சிந்திக்க வேண்டும். வடமொழிப் படைஎடுப்புத் தமிழ்நாட்டில் தலைகாட்டிய காலத்தில் வடவர்களுடைய கற்பனைக் கதைகளும் கவரும் செயல்களும் தமிழ்மக்களின் அறிவை மயக்கிவிட்டன போலும். ஆகையால், அறிவால் ஆராய்ந்து அரிய நூல்களாக்குவதை விடுத்தார்கள். வடமொழியில் உள்ள கதைகளை மொழிபெயர்க்கத் தொடங்கினார்கள். பதினெண் புராணங்களும், துணைப்புராணங்களும், இதிகாசமென்று சொல்லப்படும் இராமயண பாரதக் கதைகளும், நூற்றுக்கணக்கான தலபுராணங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

இந்தப் புராண இதிகாசங்களைப் படித்தால், படிக்கக் கேட்டால் பாவமெல்லாம் நீங்கும்; புண்ணியம் வந்து சேரும்; செல்வம் திரளும் என்றும், சொர்க்கமும் கிடைக்குமென்றும் சிலர் சொன்னார்கள்; பலர் கேட்டோம். நம் நாடு புராண இதிகாசங்கள் நிறைந்த புண்ணியநாடு. நமக்கு உலகில் இல்லை ஈடு என்ற செருக்கினால், தலைக்கிருக்கினால் பிறநாட்டவர்களின் பெருமுயற்சிகளையும், முன்னேற்ற முறைகளையும், அறிவியல்துறைகளையும் அறியும் ஆற்றலின்றிக் கிணற்றுத் தவளைகள்போலக் கிடந்தோம்; இன்னும் கிடக்கின்றோம். இன்னும் இக் கண்மூடிக்கொள்கையில் மூழ்கிக்கிடந்தால், பிறநாடுகளைப்போல முன்னேற முடியாதென்று உணர்ந்த பாரதியார், கதைகளை மொழிபெயர்ப்பதைவிட்டு கலைகளின் மொழிபெயர்ப்பைப்பற்றிக் கூறுகின்றார்.

பிறநாட்டில் நல்லறிவில் வல்லவர்களாகிய விஞ்ஞானப் புலவர்கள் பலர் இருந்தார்கள்: இருக்கின்றார்கள். அவர்கள் அறிவின் திறமையால், இடைவிடாப் பெரு முயற்சியால்,

சலியாத உழைப்பினால் அரிதின் ஆராய்ந்து கண்டறிந்த உண்மைகள் பல உள்ளன; அவை உலகவாழ்விற்கு இன்றியமையாதன; வளம் பல அளிப்பன; நலம் பல பயப்பன. அவ்வாராய்ச்சி வகைகள், அவற்றால் கண்ட உண்மை முடிவுகள். அவற்றைக் கைபாளும்முறைகள், அடையும் பயன்கள் இவற்றை எல்லாம் முறைப்படுத்தி வகைப்படுத்தி எழுதி நூல்களாக வெளியிட்டுள்ளார்கள். அவை பொதுவாக விஞ்ஞான நூல்கள் எனப்படுவன. அவற்றைத் தமிழ் மொழியில் தமிழ் மரபிற்கேற்ற முறைப்படி மொழி பெயர்த்து நூல்களாக அமைக்கவேண்டும் என்கிறார். இதையே பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்று கூறுகிறார்.

## புதுநூல்கள் இயற்றவேண்டும்.

பிறநாட்டவர் ஆராய்ச்சியால் விளைந்த நூல்களை மொழிபெயர்த்தலோடு அமையாமல், நாமும் ஆராய்ந்து புதிய உண்மைகளைக் காணவேண்டும்; புதிய நூல்களைத் தமிழில் முதன்நூலாக இயற்றவேண்டும்; அவை அழியாப் புகழுடன் விளங்க வேண்டும் என விரும்புகிறார். அறிவு யாவர்க்கும் இருக்கிறது; எவர்க்கும் பொதுவானது. ஆர்வமும், ஊக்கமும், உழைப்பும், உற்றுநோக்கியறியும் நுண்ணறிவும், சிந்திக்கும் திறனும், ஆராயும் ஆற்றலும் உடையவர்களிடம் அறிவு படிப்படியாக வளர்ந்து, உயர்ந்து பல உண்மைகளை அறிந்து தெளிய உதவுகின்றது. ஆகையால், இம்முறையில் முயன்று புது நூல்களை ஆக்கவேண்டுமென நம்மை ஊக்குகின்றார்.

நம்நாட்டில் புது நூல்கள் எழுதுகிறவர்கள் இல்லையா? நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள். புராணங்களையும் நாவல்களையும் பிறநூல்களையும் எழுதி எழுதி மலைமலையாகக் குவித்துள்ளார்கள். இன்னும் எழுதிக்குவித்துக்கொண்டே இருக்கின்றார்கள். எத்தகைய நூல்கள்? அறிவுக்குப்பொருந்

தாச்கதைகள்; கருத்தில்லாக் கற்பனைக் கதைகள்; காமப் பைத்தியத்தை எழுப்பும் காதற்கதைகள்; உண்மை உணரா உணரமுடியாத உரைகள்; மாறுன வரலாறுகள்; மனிதனை மனிதன் ஏய்த்துப்பிழைக்கும் சாத்திரங்கள்; மதநூல்கள்; சண்டைகளை வளர்த்து மண்டைகளை உடைத்துக்கொள்ளும் சமயநூல்கள் இவைகளே மலிந்து குவிந்துள்ளன. இவற்றைப் புகழும் மக்களும் படித்துமகிழும் மக்களும் இருக்கின்றார்கள். ஆனால், அறிவு வளர வளர அறியாமை ஒழிய ஒழிய அறியாமையின் அடிப்படையில் இயற்றிய நூல்களும் அவற்றிற்குரிய புகழும் இறந்துபடும். இத்தகைய நூல்களை ஒரு நாடு கோடிக்கணக்கில் கொண்டிருந்தாலும் அவற்றால் பெறும் பயன் ஒன்றுமில்லை. இதை நன்குணர்ந்த நம் பாரதியார் இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

## பழங்கதைகளிற் பயனில்லை.

புராண இதிகாசக் கதைகளைக் கேட்டுக்கொண்டிருத்தலே புண்ணியம்; நன்மைகள் தாமேவரும் என்றநம்பிக்கை நம் மக்களிடம் வேரூன்றிவிட்டது. அக்கதைகளுக்கு அவ்வளவு மகிமை உண்டு எனவும் சொல்வார்கள். இந்தப் பாழும் நம்பிக்கையால் மக்கள் சோம்பேறிகளாய்த் தொழில் முயற்சியை மறந்து, வறுமைநிறைந்து வயிறுகாய்ந்து வாடுவதைக் கண்டார் பாரதியார். இங்ஙனம் பழங்கதைகளைச் சொல்வதிலும் அவற்றைக் கேட்டுக்கொண்டிருப்பதிலும் பயனில்லை; வறுமையை நீக்கும்வழி அவற்றில் இல்லை; நீக்கக்கூடிய மகிமையும் (சத்தி) அவைகளுக்கு இல்லை. ஆதலால், இனிப் பழங்கதைகளைப்பேசிக் காலம்போக்க வேண்டாமெனக் கழறுகிறார். இதை, மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை என்று எடுத்து இடித்துக்கூறுகிறார்.

## திறமான புலமை.

இன்றைய உலகில் விஞ்ஞானஅறிவு விளங்கும் காலத்தில், பகுத்தறிவு பரவும் காலத்தில், அறிவுக்கு முதன்மை தந்து ஆராய்ச்சிக்கு மதிப்பளிக்கும் காலத்தில், ஊக்கமுடன் உண்மைகண்டு வெளியிட்டவர்க்கு உயர்வளிக்கும் காலத்தில் நம்நாட்டுப் பழங்கதைகளை நாம் வழக்கமாக நம்பிப் பாராட்டிப் புகழ்வதைப்போலப் பிறநாட்டுப் பேரறிஞர்கள் கேட்டால் பாராட்டுவார்களா? புகழ்வார்களா? புகழாவிடினும் போகட்டும் இகழாமல் இருப்பார்களா? அறிவுத் திறமையுடன் ஆக்கிய நூல்களாயின், ஆராய்ச்சியால் முறையாகக் கண்டு வெளியிட்ட உண்மைகளாயின் திறமைக்கும் புலமைக்கும் சிறப்பளித்துப் போற்றுவார்கள். உண்மைகளைத் தலைவணங்கி ஒப்புக்கொள்வார்கள். இங்ஙனம் பிறநாட்டுப் பேரறிஞர்கள் போற்றிப்புகழும் உண்மையை, உலகப் பொது உண்மையை, ஆராய்ச்சியாலும் காட்டுகளாலும் நிலைநாட்டப்படும் உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்டும் புலமையே திறமான புலமையாகும்.

இங்ஙனம் பிறநாட்டுப் பேரறிஞர்கள் பலரும் பாராட்டிப் போற்றுமுறையில் நூல் எழுதிய புலவர்களும், ஆராய்ந்து உண்மை வெளியிட்ட அறிஞர்களும் நம்நாட்டில் வாழ்ந்தார்கள். **திருவள்ளுவர்** இயற்றிய **திருக்குறளை** உலகில் பலமொழிகளுக்குரிய பேரறிஞர்கள் பலரும் படித்துணர்ந்து, உலகிலேயே ஒப்பும் உயர்வுமில்லாமல் விளங்கும் செப்பமுடைய சிறந்தநூல் எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்; பலவிதமாகப் பாராட்டியுள்ளார்கள். தங்கள் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்கள். இவ்வாறு பலநாட்டு அறிஞர்களால் பாராட்டப்பட்ட நூல் உலகில் வேறொன்றுமே இல்லை. இத்தகைய மெய்ப்புலவரை நம் தமிழ்நாடு தந்துள்ளது. திருக்குறளைப்பற்றி பல அறிஞர்கள் பாராட்டியுள்ளவைகளும் அதன் தனிச்சிறப்புக்களும் பலமொழிகளில்

மொழிபெயர்த்துள்ள விவரங்களும் **"திருக்குறள் ஆராய்ச்சி"** என்ற நூலில் வந்துள்ளன. **திருக்குறள்** விஞ்ஞான-அறிவியல் முறைக்குப் பொருத்தமாக அமைந்துள்ள சிறந்த நூலாகும். இதுகாறும் வெளிவந்த உரைகள் பலவும் இதை விளக்கும் முறையில் வெளிவரவில்லை. ஆதலால், இதை விளக்கவே **திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சி உரையும் விளக்கமும்** என்ற நூல் விரைவில் வெளிவரும்.

புல் மரம்முதலியவைகள் தொட்டால் உணரும் ஊறு (பரிசம்) என்னும் ஓர்அறிவு உடைய உயிர்கள் எனவும், இவ்வுணர்வால் இன்பதுன்பங்களை உணர்ந்து, இன்ப உணர்வால் மகிழ்வும், துன்ப உணர்வால் துயரமும் அடையும் இயல்புடையவை எனவும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழர்கள் கண்டுள்ளார்கள்.

"ஒன்றறிவதுவே உற்றறிவதுவே"
"புல்லும் மரனும் ஓரறிவினவே"
"புல்மரமுதல உற்றறியும் ஓரறிவுயிர்"

என்ற இலக்கண யாப்புக்களில் இந்த உண்மை கூறப்பட்டுள்ளன. இதை மேனாட்டு மரநூற் பேராசிரியர்கள் ஆராய்ந்து அறியாமல் இருந்தனர்.

பண்டைத் தமிழ்நாடாகிய வங்காளத்தில் தோன்றிய வசு என்பவர் (சகதீசசந்திரபோஸ்) இந்த உண்மையைத் தம் ஆராய்ச்சித் திறமையால் கண்டறிந்தார். மேனாடு சென்று தாமேசெய்த பல நுண்கருவிகளைக்கொண்டு இதை மெய்ப்பித்துக்காட்டினார். ஓரறிவுயிர்கள், இன்பதுன்ப உணர்ச்சிகளால் அடையும் மகிழ்வையும் துயரையும் ஆராய்வுமூலம் நேரில் கண்ட மேனாட்டு விஞ்ஞானிகளும், மரநூற்பேராசிரியர்களும் இவருடைய ஆராய்ச்சியறிவைப்புகழ்ந்து பாராட்டினார்கள். கலைநூற் பேராசிரியராகிய சர். பி. சி. ராயும், கணிதநூற் பேராசிரியராகிய இராமாநுசனாரும், ஒளியிற் பல புதுமைகண்ட சர். சி. வி. இராமனும் பிறநாட்டறிஞர்களின் பாராட்டுதலுக்குரியபெருமையுடையவர்கள் ஆவார்கள்

இங்ஙனம் இன்னும் புதிய புதிய துறைகளில் ஆராய்ந்து, புதிய முறைகளைக் கண்டுபிடித்து உலகுக்கு உதவி, உலக அறிஞர்களால் நம்மவர்கள் நன்கு மதிக்கப்படவேண்டும் என்பதே பாரதியாரின் பேரவா. ஆதலால் பிறநாட்டார் வணங்கும் திறமான புலமையைப் பெறவேண்டுமெனச் செப்புகின்றார். இதை. திறமான புலமை எனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்பதால் உணரவும்.

## கலைப்பணியே கலைமகள் வழிபாடு.

மேற்கண்ட வண்ணம் பிறநாட்டறிஞர் இயற்றிய அருங்கலைகளை மொழிபெயர்த்தலும், அழியாத புகழை அளிக்கும் புதுக்கலை நூல்களை இயற்றுதலும், பயன்தராமல் பொழுதை வீணாக்கும் பழங்கதைகளைப் படித்து எடுத்துச் சொல்வதை விடுத்துப் பிறநாட்டறிஞர்கள் போற்றத்தகுந்த திறமான புலமைபெற்றுப் பல உண்மைகள் கண்டு கலை நூல்களை வெளியிடுதலும் ஆகிய கலைப்பணியே கலைமகளுக்கு நாம் செய்யும் வழிபாடாகும். தமிழில் இல்லாத கலைகளே இல்லையென்று சொல்லும்வண்ணம் எல்லாக் கலைகளையும் தமிழ்மாபிற் கேற்றமுறையில் ஆக்கி அமைப்பது தான் தமிழ்த்தாய்க்கு சேய்களாகிய நாம் செய்யும் திருப் பணி ஆகும். இவ்வாறன்றிப் பழைய கதைகள் நிறைந்த ஏடுகளையும் புத்தகங்களையும் எடுத்து அடுக்கிச், சந்தனம் தெளித்து, மஞ்சள் பொட்டு வைத்து, மாலைசாற்றி, வடை சுண்டல் அவல் கடலை வைத்துப்படைத்து, வயிறார தின்று களிப்பது கலைமகள் வழிபாடாகாது.

> "மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
> வரிசையாக அடுக்கி அதன்மேல்
> சந்தனத்தை மலரை யிடுவோர்
> சாத்திரம் இவள் பூசனையன்றாம்"

என்பதால் இதை உணரவும்.

இங்ஙனம் ஆக்கிய அருங் கலைகளை நாட்டில் உள்ள மக்கள் யாவரும் படித்து அறிந்து பயன்பெறும் வகையில் பணிசெய்ய வேண்டும். வீடு தோறும் கலையின் விளக்கம் பொலியவேண்டும். வீதிகள்தோறும் நகரங்கள்தோறும் உள்ள பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளின் உள்ளங்களெல்லாம் கலைக்களஞ்சியங்களாகத் துலங்கவேண்டும். இளமையில் கல்வியறிவு பெறாத முதியவர்களெல்லாம் கல்வியறிவும் கலையறிவும் பெற்றுப் புதியவர்களாக விளங்க வேண்டும். இவற்றிற்குரிய பணியை இடைவிடாமல் ஆற்றல்வேண்டும்.

## கலைவளமே பலவளமும் தரும்.

இவ்வாறு நாட்டுமக்களிடையே கல்விப்பெருக்கமும் கலைப்பெருக்கமும் வளர்ந்தால் என்னபயன் விளையும்? என வினவலாம். இதற்கும் பாரதியார் விடை கொடுத்திருக்கின்றார்.

“வெள்ளத்தின் பெருக்கம்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

கல்வியறிவும் கலையறிவும் மக்களிடம் வளர்ந்தால் அறியாமை என்னும் படுகுழியில் விழுந்து அறிவுக்கண்களை இழந்து கண்ணுள்ள குருடர்களாய் உண்மை உணராமல் உழன்றுகொண்டிருக்கும் அறிவற்ற மக்கள் எல்லாரும் அறிவுக் கண்களைப் பெறுவார்கள். குருடர்களாய் வாழ்கின்றோம் என்ற குறைநீங்கும். இது போதாதா? இதைப் பெற்றால் எதையும் பெறலாமே! உணர்வுபெறுவார்கள்; உள்ள நிலையை உணர்வார்கள்; உயர்வடைய முயல்வார்கள். உரிய பதவி (மேலான நிலைமை) அடைவார்கள். இவைதான் விளையும் பயன் ஆகும்.

நாட்டுமக்களிடம் கலையறிவு வளர்ந்து நிறைந்தால் பல அரிய ஆராய்ச்சிகள் நிகழும்; புதுப்பொருள்களும் புதிய தொழில்முறைகளும் தோன்றும்; பழைய தொழில்களைப் புதிய முறைகளில் நடத்தலாம். கலையறிவுடைய மக்கள் தம் செல்வத்தை ஆராய்ச்சிக்கும் தொழில் துறைகளுக்கும் செலவிட முன்வருவார்கள். பலபேர் கூடிப் பெரும் பொருள் வைத்துப் பெருந்தொழில் நடத்துவார்கள். பொதுமக்களும் பங்கெடுத்துப் பொருள்கொடுத்து உதவுவார்கள். இவற்றால் பல பெருந்தொழில்கள் நடைபெறும். கலையறிவும் தொழிலறிவும் பெற்ற மக்கள், தனித்தனியாகப் பலவகையான சிறு தொழில்களையும் செய்வார்கள். இம்முறையில் ஆங்காங்கு இடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு வீடுதோறும் சிறு குடிசைத்தொழில்கள் நடைபெறும். ஒவ்வொரு வீடும் சிறு தொழிற்சாலையாக விளங்கும். இவ்விருவகைத் தொழில்களாலும் வகைவகையாகச் செய்பொருள்கள் வெளிவரும்; வாணிகம் பெருகும்; வருவாய் நிறையும்; பொருள்வளம் பொலியும்; வறுமைதொலையும்; வாழ்க்கைநிலை உயரும். கலையும் தொழிலும் பொருளும் வளரும் மக்கள் வாழ்க்கைநிலையும் மேற்கண்டவண்ணம் முன்னேற்றமடைந்த நாடுதான் உண்மையில் முன்னேற்றம் அடைந்த நாடு என்று எண்ணத்தகுந்த நாடாகும். இந்த நிலையை நம்நாடு அடைய அரும்பணியாற்ற வேண்டியது நமது கடமையன்றோ?

## தமிழ்ப்பணி நிலையம்

### தமிழ்க் குருகுலம்

இதுகாறும் கூறியுள்ள பணிகளைச் செய்வதற்காகத் தமிழகத்தின் சார்பில் தமிழ்க் குருகுலம் ஒன்று நிறுவப்பெறும். அதில் அடியிற்கண்டவண்ணம் பத்துவகையான மன்றங்களை அமைத்துப் பணி செய்யப்படும். இம்முறையில் பத்தாண்டுத் திட்டம் வகுத்து (1950—60) பத்தாண்டு

களுக்குள், தமிழில் அடியில் காணப்படும் நூல்களையும் கலைகளையும் இன்னும் வேண்டிய கலைகளையும் இனி வெளிவரும் கலைகளையும் அமைத்தற்கும்; தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளும் வெளியிலும் உள்ள எல்லாத் தமிழ்மக்களும் கல்வியறிவும் கலையறிவும் பெறுதற்கும் உரிய பெரும்பணி இடைவிடாப் பெருமுயற்சியுடன் இனிது ஆற்றப் பெறும். 1960-க்குள் தமிழ்நாட்டுத் தமிழ்மக்கள் அனைவரும் கல்விவளம் கலைவளத்தில் சிறந்து, தொழில்வளம் பொருள்வளத்தில் நிறைந்து, வாழ்க்கைவளம் உயர்ந்து வாழ்வதைக் காணவேண்டும். இதை விரும்பாதவர்கள் தமிழ்மக்களில் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இருந்தால் அவர்கள் தமிழர்களாகக் கருதப்படமாட்டார்கள். ஆதலால், எல்லாத் தமிழ்மக்களும் இப்பணிக்கு ஏற்ற உதவிபுரிவார்கள் என்ற முழு நம்பிக்கை எமக்கு உண்டு. இதனால், திட்டப்படி எல்லாம் இனிது நடந்து எமதுஎண்ணம் நிறைவேறுமெனவும் திண்ணமாக நம்புகிறோம். தமிழ்க் குருகுலத்தில் அமைக்கப்பெறும் பத்துவகை மன்றங்களையும் அவற்றின் பணிகளையும் அடியில் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

## 1. மொழியாராய்ச்சி மன்றம்

இதில், தமிழ் மொழியைப் பற்றிய உண்மைகள் பலவும் ஆராய்ந்து பலவகையான நூல்களின் மூலம் வெளியிடப்படும். 1. தமிழின் இயற்கை விளக்கம். 2. தமிழும் ஐம்பெரும் பூத அமைவும். 3. தமிழ் மொழியும் விஞ்ஞானத் தொடர்பும். 4. மொழிநூல் விளக்கம். 5. தமிழ் எழுத்தொலி இயற்கை 6. தமிழ்ச் சொற்பொருள் காரண விளக்கம். 7. தமிழ்ச் சொல்லாக்க முறை விளக்கம். 8. தமிழ்ச்சொல் விளக்கப் பேரகராதி. 9. தமிழ் முதன் மொழி. 10. தமிழ் உலகத் தாய்மொழி முதலான நூல்கள் இதன் மூலம் வெளிவரும்.

**2. இலக்கிய ஆராய்ச்சி மன்றம்**

இலக்கியத்தின் இயல்புகளெவை? தமிழில் உள்ள இலக்கிய நூல்களெவை? இக்காலத்திற்கு வேண்டிய இலக்கியங்களெவை? அவற்றை இயற்று முறைகளெவை என ஆராய்ந்து, வேண்டிய இலக்கியங்களியற்றும் பணி இதன் கண் நிகழும்.

**3. இலக்கண ஆரர்ய்ச்சி மன்றம்**

இலக்கணத்தின் தன்மை, தமிழில் உள்ள இலக்கணங்கள், அவற்றின் அமைவுகள், இன்னும் அமைய வேண்டியவைகள், இயற்கையும் இலக்கணமும் இவைகளைப்பற்றி ஆராய்ந்து "தமிழின் இயற்கை யுண்மை யிலக்கணம்" வெளியிடும் பணி இதன் கண் நிகழும்.

**4. உரைகாண் மன்றம்**

தமிழில் உள்ள நூல்களுக்கும் இனி இயற்றப்பெறும் நூல்களுக்கும் தமிழ் மரபிற்கேற்ப நேரிய முறையில் தெளிவான உரை வெளியிடும்பணி இதன் கண் நிகழும். ஆத்திசூடி முதலான சிறு நூல்களுக்கும் திருக்குறள், திருமூலர் திருமந்திரம் முதலான அரிய பெரிய நூல்களுக்கும் அறிவியல் முறைக்கேற்ற உரைகள் வெளிவராமை பெருங்குறையேயாகும். அக்குறை இப்பணியால் நிறைவெய்தும்.

**5, மொழிபெயர்ப்பு மன்றம்**

பல மொழிகளிலும் உள்ள இனி உண்டாகின்ற கலை நூல்களையும், சிறந்த பிறநூல்களையும் தமிழ் மரபிற்கேற்ற முறையில், மொழிபெயர்க்கும் பணி இதன் கண் நிகழும்.

**6. சொல்லாக்க மன்றம்**

மொழிபெயர்ப்புக்குரிய கலைச்சொற்களையும் வேண்டிய பிற சொற்களையும் தமிழின் இயற்கையமைப்பிற்கும் அறி

வியல் (விஞ்ஞான)முறைக்கும் பொருந்தும் வகையில் ஆக்கி அமைத்துக் கொள்ளும் பணி இதன் கண் நிகழும். கலைச் சொற்கள் இல்லையே, தமிழில் சொல்ல இயலவில்லையே, என்ற குறைகள் இப்பணியால் நிறைவெய்தும்.

## 7. கலையரக்க மன்றம்

கலையைப்பற்றி ஒரு நிலையான கொள்கை இன்னும் தெளிவாகவில்லை என்றே சொல்லவேண்டும். என்றாலும் மக்கள் வாழ்க்கையில் நற்பயன் அடையக் கற்றுக்கொள்வன அனைத்தும் கற்க வேண்டியவை அனைத்தும் கலைகளென்று கொள்வதில் தவறொன்றுமில்லை என்பதுண்மை. கலைக ளால் நற்பயன் விளையாமல் தீப்பயன் விளைதல் கலைகளைக் கையாளும் மக்களின் அறிவின் குறைவினாலன்றிக் கலைகளி னாலல்ல என்பதையும் நன்றாய் உணரவேண்டும். ஆதலால் மக்களின் நல் வாழ்க்கைக்குத் துணைபுரியும் கலைகள் யாவும் இதன்கண் ஆராயப்பெறும்.

திருக்குறள் போன்ற இலக்கியங்களிலும் திருமூலர் திருமந்திரம் போன்ற சித்தர் நூல்களிலும் உலக மக்களின் உயர்தர வாழ்வுக்கு இன்றியமையாத பல நுண்கலைப்பகுதி கள் நிறைந்து மறைந்துகிடக்கின்றன. இவற்றை எடுத்து வகைப்படுத்தி முறைப்படி வெளியிட்டால் வெளிநாட்டு விஞ்ஞானிகளும் வியப்படைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலால் ஒவ்வொரு துறையிலும் உள்ள ஒவ்வொரு கலை யிலும்மேனாட்டறிஞர்களின் அறிவாராய்ச்சி முறைகளையும், நம் நாட்டவர்களின் பொதுவான முறைகளையும், தமிழறி ஞர்களின் சிறப்பறிவுத் திறங்களையும் ஆராய்ந்து எடுத்துக் காட்டிக் கலைநூல்களை விளக்கமாக வெளியிடும் பணி இதன் கண் நிகழும்.

நம் நாட்டில் சில நூல்களில் பலகலைகளைப் பற்றிக் கூறப்பட்டிருப்பினும் முறைப்படுத்தி அமைத்து முடித்த நிலையில் எந்தக்கலையும் இல்லை. இம் முறையில் சில கலை

கள் இருப்பதாகக் கூறப்படுவதன்றித் துருவித் தேடினும் கிடைப்பதில்லை. நூல்களில் கலைஞானம் அறுபத்து நான்கு எனக்கூறப்பட்டுள்ளன. ஆயகலைகள் அறுபத்து நான்கு எனப் பாடலும் உள்ளது. அவற்றின் பெயர்களை மட்டும் அடியில் குறிப்பிட்டுவிட்டுப் பின் முறைப்படி அமைக்க வேண்டிய கலைகலையும் குறிப்பிடுகின்றோம்.

## கலை ஞானம் அறுபத்துநான்கு

அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதி சாத்திரம், சோதிட சாத்திரம், தரும சாத்திரம், யோக சாத்திரம், மந்திரசாத்திரம், சகுன சாத்திரம், சிற்ப சாத்திரம், வைத்திய சாத்திரம், உருவ சாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர பரீட்சை, கனக பரீட்சை, இரத பரீட்சை, கச பரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமி பரீட்சை, சங்கிராம விலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடணம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துக வாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், ஆகாய கமனம், பரகாயப் பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திர சாலம், அக்னித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித் தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கனனத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப்பிரயோகம்.

சங்கிராமம்—போர்முறை.

பைபீலிகவாதம்—எறும்புகளின் பேச்சறிதல்

கவுத்துவவாதம்—பதுமராகப்பரீட்சை,

காருடம்—விடவைத்தியம்.

அதிரிசயம்—கண்ணுக்குத்தெரியாமல் மறைவது

கனனத்தம்பம்—மண்ணில் புதையுண்டுவருதல்

அவத்தைப்பிரயோகம்—சூனியம் வைத்துக்கொல்லல்

# அமைக்கவேண்டிய அருங்கலைகள்

உடலியற்கலை
உயிரியற்கலை
மனவியற்கலை
குணவியற்கலை
உடல்நலக்கலை 5
உணவியற்கலை
சமையற்கலை
பிணிக்குணக்கலை
பொருட்குணக்கலை
வயிற்றியக்கலை 10
உறுப்பியற்கலை
மருத்துவக்கலை
அறுப்பியற்கலை
நாடிக்கலை
ஆயுட்கலை 15
வாசிக்கலை
யோகக்கலை
போகக்கலை
கற்பக்கலை
குறிப்புணர்கலை 20
தொழிற்கலை
உழவியற்கலை
பயிரியற்கலை
மரவியர்கலை
உயிரியியற்கலை 25
பூதவியற்கலை
அணுவியற்கலை
பவுதிகக்கலை
வேதிக்கலை
கலவைக்கலை 30
பொருளியற்கலை
புதையர்கலை
பொருளாக்கக்கலை
மணியியற்கலை
வாணிசக்கலை 35
கணிதவியர்கலை
பூகோளக்கலை
மண்ணியர்கலை
நீரியற்கலை
தீயியற்கலை 40
ஒளியியற்கலை
வளியியற்கலை
வாணியர்கலை
வரலாற்றுக்கலை
வாழ்க்கைமுறைக்கலை 45
வழக்குமுறைக்கலை
ஆட்சிமுறைக்கலை
அரசியற்கலை
அறவியற்கலை
குடியியற்கலை 50
குடிப்பயிர்சிக்கலை
உடற்பயிர்சிக்கலை
படைப்பயிற்சிக்கலை
போர்த்தொழிற்கலை
கம்மியக்கலை 55
பொறியியற்கலை
பொறியாக்கக்கலை
பொறியியக்கக்கலை

நெசவுக்கலை
தையற்கலை 60
பின்னற்கலை
புனைவுக்கலை
எழிற்கலை
பொழிற்கலை
இன்பக்கலை 65
காமக்கலை
கலவிக்கலை
களிப்புக்கலை
கருவியற்கலை
மக்கள்வளர்ப்புக்கலை 70
ஓவியக்கலை
சிற்பக்கலை
கட்டிடக்கலை
சுண்ணக்கலை
வண்ணக்கலை 75
இசைக்கலை
கருவிக்கலை
பல்லியக்கலை
பாட்டுக்கலை
ஆட்டக்கலை 80
நாட்டியக்கலை
மெய்ப்பாட்டுக்கலை
சுவைக்கலை
நாடகக்கலை
நிழற்படக்கலை 85
பேசும்படக்கலை
ஒளிப்படக்கலை
மொழிக்கலை
ஒலிக்கலை
ஒலிப்பொருட்கலை 90
ஒலிப்பதிவுக்கலை
ஒலிபரப்புக்கலை
இலக்கியக்கலை
இலக்கணக்கலை
எழுத்துக்கலை 95
பேச்சுக்கலை
கவிதைக்கலை
அச்சகக்கலை
அன்புக்கலை
காதற்கலை 100
அருட்கலை
இறைமைக்கலை
சமையக்கலை
பத்திக்கலை
சத்திக்கலை 105
சித்திக்கலை
ஆன்மவியற்கலை
அறிவியற்கலை
மெய்யுணர்வுக்கலை
முத்திக்கலை 110
பேரின்பக்கலை
சாகாக்கலை

இவற்றுள் சில கலைகள் பலவகைப் பிரிவுகளாகவும் அமையும்.

**8. வெளியீட்டு மன்றம்.**

மேற்கண்டவண்ணம் இயற்றப்பட்ட நூல்களை அச்சகம் அமைத்து வெளியிடும் பணி இதன்கண் நிகழும்.

**9. பயிற்சி மன்றம்**

மேலே குறிப்பிட்ட வண்ணம் ஆராய்ச்சி செய்யவும், உரைகாணவும், நூமொழிபெயர்க்கவும், சொற்களையும், கலை நூல்களையும், பிறநூல்களையும், இயற்றி அமைக்கவும், வெளியிடவும் வேண்டிய பயிற்சிகளும், வெளியில் சென்று பணியாற்றுவதற்குரிய பயிற்சிகளும் இதன் கண் அளிக்கப் பெறும்.

**10. வெளிப்பணி மன்றம்.**

வெளியில் சென்று பணியாற்றுவதற்காக முறைப்படி பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்களைக்கொண்டு அடியில் கண்டவண்ணம் வெளியில் பணியாற்றும் செயலை இம் மன்றம் நடத்துவிக்கும்.

**கல்விப்பணி கலைப்பணி.**

1. **"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்"** எனப் பாரதியார் கூறியபடி, தமிழகத்தின் கண்ணுள்ள நகரங்களின் ஊர்களின் தெருக்கள் தோறும் தமிழ்ப்பாடல்களை முழக்கித் தமிழ்மக்களைக் கூட்டித் தமிழின் நன்மைகளை விளக்கி விரிவுரைகள் நிகழ்த்தித் தமிழ்ப்பற்று உண்டாகும்படிச் செய்தல்.

2. **"வீடுதோறும் கலையின் விளக்கம்"** என்றபடி ஒவ்வொரு வீட்டிலுள்ள ஆண் பெண் அனைவருக்கும் கல்வியறிவும் கலையறிவும் பெற்று விளங்கவேண்டுமென்ற உணர்ச்சியை உண்டாக்கி அவர்கள் அவற்றைப்பெற உதவிசெய்தல்.

3. பிள்ளைகள் படிக்கத்தகுந்த பள்ளிகள் அரசாங்கத்தாரால் அமைக்கப்படாத விடங்களில் பள்ளிகளை அமைத்து நடத்துதல்.

4. வயதுஆனவர்களின் கல்விவளர்ச்சி, கலைவளர்ச்சிக்காகப் பகலில் அல்லது இரவில் பாடசாலைகளை நடத்தி ஆண்களுக்குப் பணியாளர்களைக்கொண்டும் பெண்களுக்குப் பணிப்பெண்களைக்கொண்டும் கற்பித்தல்.

5. நீதிநூல்களையும் அறிவுநூல்களையும் வாழ்விற்கு வேண்டிய கலைநூல்களையும்கொண்ட நூல்நிலையங்களை ஊர்தோறும் அமைத்து மக்களைப் படிக்கச்செய்தல்.

6. நூல் நிலையத்தில் வந்து படிக்கவியலாதவர்களுக்கும் வீட்டில் உள்ள பெண்களுக்கும் நூல்களை வீடுதோறும் கொண்டுபோய்க் கொடுத்துப் படிக்கும்படிச் செய்தல்.

7. பெரிய ஊர்களிலும், நகரங்களிலும் தமிழ்மன்றங்களை அமைத்து, விரிவுரைகளும் விழாக்களும் நடத்தி மொழியறிவும் கலையறிவும் வளரும்படிச் செய்தல்.

8. தமிழில் சிறந்த அறிவும் தேர்ச்சியும் பெறவும் பிற கலைகளைக் கற்கவும் விரும்புகிறவர்களுக்குத் தகுந்த ஆசிரியர்களைக்கொண்டு கற்பித்தல்.

9. **தொழிற்பணி:** நாட்டில் பலவிடங்களில் கிடைக்கும் பலவகையான மூலப்பொருள்களை ஆராய்ந்தும், அவற்றின் பயனை அறிந்தும் தொழில்களுக்கும் பிறதுறைகளுக்கும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளச் செய்தல்.

10. வாழ்விற்குரிய பலவகையான பொருள்களையும் நம் நாட்டிலேயே ஆக்கிக்கொள்ளுதற்குரிய ஊக்கமும் தொழிலறிவும் மக்களுக்குண்டாகும்படிச் செய்தல்.

11. நாட்டுக்கு நலந்தரும் பெருந்தொழில்களை நடத்தத் தொடங்கும் கும்பனிகளிலும் கூட்டுறவு நிலையங்களிலும் பங்கெடுத்துப் பொருளளித்து நாட்டுத் தொழிலை வளர்க்கவேண்டுமென்ற நல்லுணர்ச்சியை உண்டாக்குதல்.

12. **ஒற்றுமைப்பணி:** மக்களுக்குள் சாதி, மதம், சமயம் என்ற பிரிவுகளாலும், இவற்றின் கொள்கைகளினாலும் பிறவகைகளினாலும் வேற்றுமை ஏற்பட்டுக் கட்சிகளும் பூசல்களும் வம்பு வழக்குகளும் விளைந்து வீண்செலவுகளால் பொருள் அழிந்து நாடு கெடாவண்ணம் இனம் ஒன்றே, இறை ஒன்றே, நெறி ஒன்றே என்ற தமிழ்மரபின் தலைசிறந்த கொள்கைப்படி வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஓங்கி

நல்வாழ்க்கை வாழவேண்டுமென்ற நல்லுணர்ச்சியை மக்களிடம் உண்டாக்குதல்.

13. ஊர்களிலும் நகரங்களிலும் சேர்ந்துள்ள இனிச் சேர்க்கும் பொதுநிதியைப் பயனற்ற ஆடம்பர முறைகளில் செலவழித்துவிடாமல், கல்வியறிவு கலையறிவு உலகியலறிவு வளர்ச்சிக்கும் மக்களின் பொதுநல (சுகாதார) வளர்ச்சிக்கும் பயன்படு முறைகளில் செலவழித்து நலம்பெறும் வகைகளை அறிவித்தல் இவைபோன்ற இன்றியமையாத பிற பணிகளையும் செய்தல்.

## இதுதான் பெரிய அறப்பணி.

உலகில் அறங்கள் பலவகைப்படுமாயினும், மக்களுக்கு அறிவை அளிக்கும் அறமே தலைசிறந்த அறமாகும். "அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார். என்னுடைய ரேனு மிலர்" என்றபடி மக்கள் நல்லறிவைப் பெற்றால் எல்லா வளமும் பெற வசதிகள் எற்படும். "எழில்தரும் பொழில்களை வைத்து வளர்த்தல், நிழல்தரும் நெடிய சாலைகளை அமைத்தல், நீர்தரும் இனிய சுனைகளை இயற்றல், அன்னசத்திரங்களை ஆயிரக்கணக்கில் கட்டுதல், பதினாயிரக் கணக்கில் கோயில்களைக் கட்டிவைத்தல், இவைபோன்ற அறங்கள் எல்லாவற்றையும் விட எழுத்தறிவில்லாத ஒரு ஏழைக்கு எழுத்தறிவிக்கும் அறமே கோடிமடங்கு புண்ணியம் கொடுக்கும் அறமாகும்" என்பது அறிஞர்களின் துணிவாகும். பாரதியாரும் இதையே பகர்கின்றார்.

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்

அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்பதால் உணரவும்.

எழுத்தறிவித்தலுக்கே இவ்வளவு பெருமையிருந்தால் கலையறிவை வளர்ப்பதற்குப் பல கோடிமடங்கு புண்ணியம் உண்டாகுமென்பது திண்ணம். ஆதலால், பொதுமக்கள் பலவகைகளிலும் இப்பணிக்கு உதவிபுரிய வேண்டும்.

## தமிழ்க்குருகுலக் கொள்கையும், திட்டமும்.

**கொள்கை :-** இந்தக் குருகுலம் எந்த அரசியல் கட்சியையும், எந்த மதத்தையும் சார்ந்ததன்று. தமிழ் மொழி, தமிழ்க்கலைகள், தமிழ் நாட்டுத் தொழில்கள் இவற்றின் வளர்ச்சிக்காகவும், தமிழ்மக்கள் மொழியறிவும் கலையறிவும், தொழிலறிவும் பெற்று வளமுற்று வாழ்வதற்காகவும் பணியாற்றுவதே இதன் நோக்கம்.

"ஒன்றே குலமும். ஒருவனே தேவனும் நன்றே நினைமின்" என்ற தமிழ் மரபிற்குரிய தலைசிறந்த கொள்கையே இதன் சமயக் கொள்கையாகும். ஆதலால், சாதி மத அரசியல் பேதங்களைக் கருதாமல் தமிழ் மக்கள் அனைவரும் இதில் சேர்ந்து பணியாற்றலாம். இறைமைக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களும் மொழி, கலை, தொழில், மக்கள் ஒற்றுமை, நல்வாழ்க்கை இவற்றின் முன்னேற்றத்திற்காகச் சேர்ந்து பணியாற்றலாம். எவ்வகையான அலுவல்களில் இருப்பவர்களும் பலவகையான சங்கங்களில் கழகங்களில் மன்றங்களில் அங்கத்தினராக இருப்பவர்களும் மாணவி மாணவர்களும் ஆசிரியர்களும், கலையறிஞர்களும் மொழிப் புலவர்களும் பொதுமக்களும் இதில் அங்கத்தினராகச்சேரலாம். பணியாற்றலாம்.

மொழியறிஞர்கள், கலையறிஞர்கள். ஆராய்ச்சியாளர்கள்; அன்பர்கள் தாங்கள் வெளியில் இருக்கும் அலுவல்களில்

இருந்து கொண்டே இதன் கண் நிகழும் கூட்டங்களில் கலந்து திட்டமிட்ட வண்ணம் அவரவர்களுக்குரிய துறைகளில் பணியாற்றலாம். அவரவர்கள் ஆராய்ந்து உழைத்து உருவாக்கும் நூல்களை அவரவர்கள் உருவப்படங்களுடன் வெளியிடப்பெறும். ஏற்ற ஊதியமும் அளிக்கப்பெறும். கைம்மாறு கருதாமலும் உழைப்பை உதவலாம்.

குருகுலத்தின் அகத்தில் இருந்து பணியாற்ற விரும்புகின்றவர்களுக்கு உணவு முதலான வசதிகள் அளிக்கப்பெறும். நிறைந்த பொருள் சேர்ந்தால் ஊதியமும் அளிக்கப் பெறும். பாதிரிமார்களும் பணிப்பெண்களும் சமய நெறியிலும் கல்வித்துறையிலும் பணியாற்றுவதைப் போலப் பெரும்பாலும் ஊதியத்தை எதிர்பாராமல் பணியாற்ற வேண்டும்.

## திட்டம்

பத்தாண்டுத் திட்டத்தில் முற்பகுதியில் பெரும்பாலும் முதலில் ஒன்பது மன்றங்களில் குறிப்பிட்டுள்ள பணிகள் நிகழும். இதற்குத் தமிழ்நாட்டில் தகுந்த இடத்தில் பத்து ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவுள்ள நிலம் வாங்கி, குருகுல நிலையம் அமைக்க வேண்டும். இதன் சார்பில் ஒரு உயர்நிலைப் பள்ளியும் (ஹைஸ்கூல்) பலவகைத் தொழில்களையும் பயிற்றுவிக்கும் தொழிற்கூடமும் அமைக்க வேண்டும். இதில் அரசாங்கத்தார் அமைக்கும் பாடத்திட்டத்துடன் பலவகைத் தொழிலறிவும், ஆராய்ச்சியறிவும், கலையறிவும், உலகியலறிவும் பெறவும் ஒழுக்க நெறியின் உயர்வினை அறிந்து கடைப்பிடித்து நடக்கவும் ஏற்ற பயிற்சிகள் அளிக்கப்படும். இம்முறையில் குருகுலப்பள்ளியில் பயிற்சி பெறுவோர் தனிச்சிறப்புடன் திகழ்வார்கள்.

பிற்பகுதியில் வெளிப்பணி மன்றத்தில் குறிப்பிட்ட வண்ணம் வெளியில் சென்று பணியாற்றும் செயல் நிகழும். இதற்கு 20 பேர்கள் அமர்ந்து செல்லக்கூடிய வண்டிகள்

(மோட்டார்கள்) ஐந்து வேண்டும். பத்தாண்டுகளில் இப்பணியை ஆற்றிய பின்னர் குருகுலச் சார்பில் நடத்தப்படும் பள்ளியைப் போலப் பலவிடங்களிலும் பள்ளிகள் அமைத்து நடத்தவும், இந்த முறையில் கல்லூரிகளையும் அமைத்து நடத்தவும் குருகுலம்பணியாற்றும். இப்போது நம் நாட்டில் பிறநாட்டுப் பணிநிலையத்தைச்சார்ந்த (மிஷனரி) பள்ளிகளும் கல்லூரிகளும் பல நடைபெறுவதுபோலக் குருகுலப் பள்ளிகளும், கல்லூரிகளும் பல சிறப்பியல்புகளுடன் நடைபெறும்.

## வேண்டுகோள்

தமிழகத்தில் இத்தகைய பெரும்பணியைப் பத்தாண்டுகளில் ஆற்றிப் பயன் காண்பதற்கு நிறைந்த பொருளும் சிறந்த பணியாளர்களும் பணிப்பெண்களும் வேண்டும். இதற்கு வேண்டிய பொருளை முழுதும் அரசாங்கம் அளிக்குமா? நிதிச்செல்வர்களும், பொதுமக்களும் பொருள்உதவி புரிய வேண்டும். 'ஏற்பது இகழ்ச்சி' என்பது தமிழ்ப் பெருமக்களின் தலைசிறந்த கொள்கையாயினும், "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றபடி, பொதுமக்களிடம் ஏற்றுத்தான் இப்பணியை ஆற்றவியலும். தட்டுப்பிச்சை எடுத்தாவது தமிழ்ப்பணியாற்றத் தயங்கலாகாது. ஆதலால், இரக்கத் துணிவுகொண்டோம்; நிதிச்செல்வர்களும் பொதுமக்களும் இப்பணிக்கு இரக்கத்துடன் கொடுக்கத் துணியவேண்டும்.

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்!

பெருநிதிச்செல்வர்கள் பதினாயிரக்கணக்கில் ஆயிரக்கணக்கில் பொருள் கொடுத்துதவவேண்டும். முன்னால் கண்ட நூல்களில் அவரவர்களுக்கு விருப்பமான நூல்களை வெளியிடுவதற்குரிய பொருளை அளித்தால், அக்கொடையாளர்களின் உருவப்படங்களுடன் நூல்கள் வெளியிடப்படும். ஆயிரக்கணக்கில் பொருள் அளிக்கும் அன்பர்களின்

உருவப்படங்களும் விவரங்களுடன் குருகுல ஆண்டு அறிக்கையில் வெளியிடப்படும். குருகுல நிலையத்திலும் இவர்கள் படங்கள் வைக்கப்படும். நூறு, பத்து, ஐந்து எனப் பொருள் அளிப்பவர்களின் பெயர்கள் குருகுலக் கொடையாளர்களின் பெயர் வரிசைகளில் பொறிக்கப்பெறும். நன்கொடையாக நல்காவிடினும் நூல்களுக்காக முன்பணமளித்தால் மூக்கால் விலைக்கு வேண்டிய நூல்கள் பெறலாம்.

அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

பொருள்கொடுக்க வசதியற்றவர்கள், தமக்குத்தெரிந்த செல்வர்களிடம் சென்று, இப்பணிக்குப் பொருள் உதவும்படிச் சொல்லித் திரட்டித் தரவேண்டும். இம்முறையில் வாய்ச்சொல் உதவி செய்ய வேண்டும்.

கல்விச்செல்வமும் கலைச்செல்வமும் உடையவர்கள் தங்கள் கலைப்பொருளை கைம்மாறு கருதாமல் அளித்துக் கலைவளர்ச்சிக்கு உதவிபுரியவேண்டும். மேற்கண்ட பத்துவகை மன்றங்களிலும் சேர்ந்து பணியாற்றும் அறிவும் ஆர்வமும் உடையவர்கள் உடல் உழைப்பாலும் அறிவு உழைப்பாலும் இப்பணிக்கேற்ற உதவிகள் புரியவேண்டும். இசைக்கலை நாடகக்கலை, நாட்டியக்கலைகளில் வல்லவர்கள் இப்பணிக்கெனத் தனி அரங்குகள் நடத்திப் பொருள் திரட்டி அளித்து உதவவேண்டும்.

மதுரத் தேமொழி மாதர்களெல்லாம்
வாணிபூசைக் குரியன பேசிர்!

இனியமொழியும் இனியபண்பும் இனிது அமைந்த மாதர்கள் இதில் பங்கெடுத்துக்கொண்டு கல்விவளர்ச்சி கலை வளர்ச்சிக்குப் பணியாற்ற முன்வர வேண்டும். இவர்களுக்குத் தனி வசதிகள் அளிக்கப்பெறும்.

எதுவும் நல்கி யிங் கெவ்வகையாலும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!

இங்ஙனம் பொருளையும், வாய்ச்சொல்லையும், உழைப்பினை

யும் அளித்தும் எவ்வகையிலாவது இப்பெரும் பணியைத் தமிழ்நாட்டில் நிலைநாட்டிப் பயன் காணவேண்டும். இதற்குப் பொதுமக்கள் பேருதவி பெரிதும் வேண்டும். தமிழ் மொழியும் தமிழ்க்கலையும் தமிழ்நாட்டுத் தொழிலும் வளரும் வளரவேண்டாமெனக் கருதுகின்றவர்கள் கூறுகின்றவர்கள் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெருமக்களில் யாரும் இருக்க மாட்டார்கள். ஆதலால், பணியாளர்கள் ஆங்காங்கு பணியாற்ற வரும்போது பொதுமக்கள் வேண்டிய வசதிகள் அளித்தும் பொருள் அளித்தும் உதவிபுரிய வேண்டும். தமிழ் அன்பர்கள் ஆங்காங்கு தமிழ்ப்பணி மாநாடுகள் நடத்தி நிதி திரட்டி அளித்துதவ வேண்டும்.

ஊர்ப்பொதுவிலும், கூட்டுறவுக் கழகங்களிலும், பிற கழகங்களிலும் பொதுநல நிதியாக உள்ள பொருளை இப் பணிக்கு அளித்து உதவ வேண்டும்.

அறத்துறைகளில் பொருள் செலவிட ஆர்வமுள்ளவர்களும் மக்கட்பேறு இல்லாதவர்களும் பொருளை மற்றவகைகளில் செலவிடுவதை விட நாட்டு மக்களிடம் கல்வியறிவையும், கலையறிவையும் பரப்பும் இப்பணிக்கு அளிப்பது சிறந்த அறமாகும். குடும்பத்துடனும் பொருளுடனும் குருகுலத்தில் சேர விரும்புவோர் குருகுலக் குடும்பங்களுடன் சேர்ந்து பணியாற்றலாம்.

இப்பணியில் ஆர்வமுள்ள அன்பர்களும், பத்திரிக்கைகளுக்குரியவர்களும் ஆசிரியர்களும் பொதுமக்களிடம் கட்டணம் நன்கொடை திரட்டிப் பெயர் விவரங்களுடன் அளித்துதவினால், அவரவர்கள் கொடுக்கும் பெயர்ப்பட்டியின்படி குருகுலத்தின் பணப்பற்றுச்சீட்டு (இரசீது) கள் அனுப்பப்பெறும். தனியாக அனுப்புகிறவர்களும் அடியிற் கண்ட விலாசத்திற்கு அனுப்பினால் சீட்டு அனுப்பப்படும். பணம் திரட்டும் உரிமை பெற்றுத் தமிழ்க் குருகுலத்தின் அடையாளமாகிய தமிழ்க்கொடி பொறித்த சீட்டுடன் வரும் பணியாளர்களிடம் கட்டணம் நன்கொடை முதலான

கும் அளித்துச் சீட்டு பெறலாம். வரவு செலவுக்குச் சரியான கணக்கு வைத்து ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ்க் குருகுல அறிக்கையில் வெளியிடப்படும்.

**கட்டணம், நன்கொடை:**-16 வயதுக்குட்பட்டவர்களுக்கு எட்டணவும் மேற்பட்டவர்களுக்கு உரூபாய் ஒன்றும் ஆண்டுக்கட்டணம். இஃதன்றி விரும்பும் நன்கொடையும் அளிக்கலாம்.

கட்டணம் அளிக்கும் அங்கத்தினர்களும் நன்கொடையாளர்களும் ஆங்காங்கு நடக்கும் மாநாடுகளிலும், தனிக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளலாம். தங்கள் தங்கள் கருத்துக்களையும் எடுத்துரைத்துப் பணியாற்றலாம்.

அரசாங்கத்தாரும் இது நாட்டுக்கு நலம் தரும் நற்பணியென்பதை நன்கு உணர்ந்து பேருதவி புரிய வேண்டும். நாட்டு மொழியும் கலைகளும் தொழில்துறைகளும் வளர்ந்து நலமடைய வேண்டுமென்ற நல்ல எண்ணம் எள்ளளவாவது இருப்பவர்கள் எல்லாரும் இப்பணிக்கு ஏற்ற உதவிபுரியலாம். இத்துறையில் அரசாங்கம் பலகோடிப் பொருளைச் செலவழித்தாலும் ஐம்பது ஆண்டுகளிலும் செய்துமுடிக்க முடியாத அரும்பணியைச் சிலகோடிச் செலவில் பத்தாண்டுகளில் இத்தமிழ்க் குருகுலம் நிறைவேற்றி வைக்கும் என்பது திண்ணம். ஆதலால் அரசாங்கத்தாரும் பொதுமக்களும் ஆவன செய்யவேண்டுமென வேண்டிக்கொள்ளுகின்றோம்.

**குறிப்பு:**—தமிழ்க் குருகுலத்திற்கெனத் தனி நிலையம் தகுந்த விடத்தில் அமைக்கும் வரைக்கும் தமிழகத்தின் சார்பில் உறையூர் இலிங்காயத்தார் தெருவில் இதன் அலுவலகம் இருந்து வரும். ஆதலால், **உரிமையாளர், தமிழகம், இலிங்காயத்தார் தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி.** என்ற விலாசத்திற்கு எழுத வேண்டுகின்றோம்.

ஜெகதீசன் பிரஸ், கரூர்.

# தமிழ்க் குருகுலத்தில்
# அங்கத்தினராகச் சேர்வதற்குரிய
# விண்ணப்பம்.

தமிழ்க் குருகுலத்தின் தலைமைப்பணியாளர் அவர்களுக்கு,

ஐயா! நான் தமிழ்க் குருகுலத்தின் பணியில் பங்கெடுத்துக் கொண்டு பணியாற்றவிரும்புகிறேன்.

(ஆதரவாளர் 5-ம் பணிபுரிவோர் 10-ம் எழுதவேண்டும்.)

1. பெயர், வயது, ஆண் அல்லது பெண்.
2. முழு விலாசம்
3. கல்வி, மொழியறிவு, கலையறிவு.
4. தொழில் வருவாய்.
5. ஆதரிப்பவர் அல்லது பணியாற்றுபவர்.
6. எந்த மன்றத்தில் எத்தனை ஆண்டுகள் பணியாற்ற விருப்பம்.
7. ஊதியம் வேண்டுமா? எவ்வளவு?
8. கணவன் மனைவி மக்களுடன் குருகுலத்தில் சேர்ந்து பணியாற்ற விருப்பமானால் அவர்கள் தகுதிகளெவை?
9. தலைமைப்பணியாளர் உங்களை விலக்கி விடக் கருதினால் விலகிவிட விருப்பமா?
10. பணியில் ஆர்வமும், உழைக்கும் ஊக்கமும் நேரும் ஊறுகளைத் தாங்கும் பொறையும் அமைந்துள்ளனவா?

உறுதிமொழி:—மேற்கண்டவை முற்றும் உண்மைகள். குருகுலத்தில் இப்போதுள்ள இனி ஏற்படும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுகிறேன். அங்கத்தினர்க்குரிய கட்டணத்தொகையை அனுப்பி இருக்கிறேன்.

நாள்

இடம் கை எழுத்து.

குறிப்பு:—இதைப்போல் கையால் எழுதி முடித்து முன் பக்கம் கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

# தமிழகத்தின் ஆராய்ச்சி நூல்கள்.

## திருக்குறள் ஆராய்ச்சி

திருக்குறளின் தனிச்சிறப்பையும். உலக அறிஞர்கள் அளித்த பெருமதிப்பையும். பொருந்தாக் கொள்கைத் திணிப்பையும். உரையாசிரியர்களின் மறைப்பையும். ஆசிரியர் காலம். சமயம் கருத்து. கொள்கை முதலாகக் குறளைப்பற்றி அறியவேண்டிய அனைத்தையும் எடுத்துக் காட்டி விளக்கும் அரிய ஆராய்ச்சி நூல். ரூ. 1—8—0

## வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்

திருவள்ளுவரைத்தந்த பழந்தமிழ் மரபின் தோற்றம், தொன்மை, பெருமை கொள்கை. நாகரிக வாழ்க்கை முறை முதலானவைகளையும் வடவர்களின் வரலாறு, கொள்கை. வாழ்க்கை முறை முதலானவைகளையும், வேதம் மநுநூல் கொள்கைகளுக்கும் திருக்குறளின் கொள்கைகளுக்கும் உள்ள வேற்றுமைகளையும் இரு பிரிவினரும் ஒரே இனத்தவர் என்பதையும். இவர்கள் வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஓங்கி வாழும் வகைகளையும் ஆராய்ந்து விளக்கும் அரிய நூல். ரூ. 1—0—0

சாகா நிலைக்குரிய முறைகள் . . . 0—8—0

திருவள்ளுவர் படம், தமிழ்க்கொடி . . 0—4—0

## திருக்குறள் அறிவியல் (விஞ்ஞான) ஆராய்ச்சி உரையும், விளக்கமும்.

திருக்குறள் உலகம் போற்றும் [illegible]து நூல் அறிவு நூல் என அறிஞர்கள் புகழ்கின்றார்கள். எனினும், மேற் கண்ட உண்மைக்கும் அறிவியலுக்கும் பொருந்து முறையில் எந்த உரையும் வெளிவரவில்லை. இதனால் திருக்குறளின் உண்மை உயர்வை மக்கள் உணரவியலாப் பெருங்குறை இன்றும் உள்ளது. ஆதலால் தமிழ்மரபிற் கேற்ப நூலியற்றிய வள்ளுவர்கொள்கைக்கும் அறிவியல் முறைக்கும் பொருந்தும் வகையில் எளிய நடையில் விரிவான விளக்கங்களுடன் இவ்வுரை விரைவில் வெளிவரும். சாதாரண பதிப்பு ரூ. 5-0-0 உயர்ந்த பதிப்பு ரூ. 7-8-0

## திருக்குறள் அறிவியல் பொழிப்புரை.

சாதாரண பதிப்பு ரூ. 2-0-0 உயர்ந்த பதிப்பு ரூ. 3-0-0

குறைந்தபடிகள் வெளியிடுவதால் முன்பணம் அனுப்பிப் பதிவு செய்துகொண்டவர்களுக்குத்தான் கிடைக்கும்.